# மாகாண சபைத் தேர்தல்கள் சட்டம்


தொகுப்பு:

**சட்டத்தரணி சந்துன் குணவர்தன**


2013


**பவ்ரல்**

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு

12/3, ரொபர்ட் குணவர்தன மாவத்தை, கொழும்பு 06

தொலைபேசி: 011 – 2514441/2

தொலைநகல்: 011 – 2514443

மின்னஞ்சல்: paffrel@sltnet.lk

இணையத்தளம்: www.paffrel.lk

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| முகவுரை | 01-20 |
| தேர்தல் தவறுகள் | 21-37 |
| வாக்கெடுப்பு | 38-54 |
| வாக்கெண்ணல் | 55-67 |
| தேர்தல் மனுக்கள் | 68-72 |
| திருத்தற் சட்டம் | 73 |

# முன்னுரை

1987 இல் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்புக்கான திருத்தத்துடன் இலங்கையின் தேர்தல் அகராதியுடன் மாகாண சபைகள் என்றொரு புதுப்பதம் இணைந்துகொண்டது. அதிகாரப் பரவலாக்கம் பற்றி நீண்ட காலமாக நிலவிய அரசாங்க மறுசீரமைப்பு உரையாடல், அது உருவாவதற்கான பிரதான காரணமாக அமைந்தது. அன்றுமுதல் இன்றுவரை மக்களின் இறையாண்மை அதிகாரத்தை மாகாண மட்டத்தில் பிரயோகிக்க மக்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிட்டியது. இச்சந்தர்ப்பத்தை உயர்ந்தபட்சமாக பாதுகாக்க பங்களிப்புச்செய்வது எமது செயற்பொறுப்பு என்பதுடன், 1993 இல் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல் முதல் எல்லா மாகாண சபைத் தேர்தல்களையும் கண்காணிப்புச்செய்வதில் நாம் ஈடுபட்டோம்.

மக்கள் எந்த அரசியல் நம்பிக்கையைக் கொண்டிருந்தபோதும் ஜனநாயகக் கட்டமைப்பில் நாட்டின் ஆட்சியில் இணைந்துகொள்ளும் பிரிக்கமுடியாத உரிமை அவர்களுக்குக் கிடைக்கிறது. வன்செயல், சட்டத்தைப் புறக்கணித்தல், இலஞ்சம், ஊழல், அரச அதிகாரத் துஷ்பிரயோகம் போன்ற ஜனநாயக முரணான செயற்பாடுகள் மக்களின் அத்தகைய உரிமைகளைப் பறிக்கின்றன.

தமது ஓர் அடிப்படை உரிமையான வாக்குரிமையைக் பாதுகாப்பதற்கெனில், சுதந்திரமானதும் நீதியானதுமான ஒரு தேர்தலை நடாத்துவதற்கு நிபந்தனையின்றி ஒழுங்கமைய வேண்டும் என்பது எமது நம்பிக்கையாகும். எத்துணை சட்டங்கள் காணப்பட்டாலும், மக்கள் தமது உரிமைகளைக் கட்டிக்காக்க முன்வரும் வரை அவற்றைக் கட்டிக்காப்பது சிரமம் மிகுந்ததாகும்.

தம்மீது பாதிப்புச்செலுத்தும் சட்டம் பற்றி தாம் அறிந்தநிலையில் இருப்பது அதற்கான ஒரு முக்கிய நிபந்தனையாகும். தேர்தல் சட்டங்கள் தொடர்பான இக்கைந்நூல் அந்நோக்கத்தை அடைந்துகொள்ளும் நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ளது. இது தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கும் தமது வாக்குரிமை பற்றி கரிசனை கொண்டுள்ள அனைவருக்கும் பயனுள்ளதாக அமையும் என்பது எமது நம்பிக்கையாகும்.

**ரோஹண ஹெட்டிஆரச்சி**
நிறைவேற்றுப் பணிப்பாளர்
சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு

# முகவுரை

**மாகாண சபைகள்**

மாகாண சபை முறையானது முதன்முறையாக 1987 இல் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டதற்குரிய காரணம், இலங்கை அரசாங்கத்துக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் இடையில் 1987 ஜூலை 29 ம் திகதி கைச்சாத்திடப்பட்ட இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தமாகும். 80 தசாப்தத்தின் முதலரைப் பாகத்தில் ஆரம்பித்து மேற்சொன்ன ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலப்பகுதியளவில் மிகவும் தீவிரமடைந்திருந்த சிவில் மோதல் நிலைமையைத் தணிப்பதற்கான நிலைபேறான ஒரு தீர்வைப் பெற்றுக்கொடுப்பது மேற்சொன்ன இந்திய-இலங்கை அமைதி ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது.

1987 இல் இலங்கை அரச தரப்பு படைகளினால் எல்ரீரீஈ இயக்கத்திற்கு எதிராக பாரிய அளவிலான யுத்த நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டதுடன், விசேடமாக தென்னிந்தியாவில் கடும் கொந்தளிப்புநிலை எழ இந்நிலை காரணமாக அமைந்தது. அன்று நிலவிய சர்வதேச அரசியல் காரணிகளின் பேரில் இந்திய அரசாங்கம் இப்பிரச்சினையில் நேரடியாகவும் அபிப்பிராய பேதத்துடனும் தலையிட்டது. தமிழ் மக்கள் மத்தியில் நிலவிய மனஉலைச்சலை ஒழிப்பதற்கான ஒரே தீர்வு அதிகாரப் பகிர்வு மட்டுமே என்ற கடும் நிலைப்பாட்டை இந்திய அரசாங்கம் கொண்டிருந்தது.


அதன்படி, அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும்பொருட்டும் ஏனைய தேவைகளை நிறைவேற்றும் பொருட்டும் 1978 அரசியலமைப்பில் திருத்தம் கொண்டுவர வேண்டியநிலை ஏற்பட்டது. சொல்லப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்ளும் நோக்கில் 13 வது அரசியலமைப்புக்கான திருத்தம் கொண்டுவரப்பட்டது.

பிரதானமாக 1978 அரசியலமைப்பின் 18 ஆவது உறுப்புரையைத் திருத்தியமைத்து தமிழ்மொழியை உத்தியோகபூர்வ மொழியாக ஏற்றங்கீகரிக்கும் பதங்களுக்கிடையில் 138 ம் பிரிவு திருத்தப்பட்டு அந்தந்த மாகாணத்திற்கான மாகாண மேல்நீதிமன்றம் வீதம் நிறுவப்பட்டது.

மிக முக்கிய திருத்தம் யாதெனில், 1978 அரசியலமைப்புக்கு புதிதாக சேர்க்கப்பட்ட 154 வது உறுப்புரையாகும். அதன்மூலம், இலங்கை 09 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு அந்த ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு மாகாண சபை வீதம் நிறுவப்பட்டது. இம்மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்கள் குறித்த விளக்கமொன்று சொல்லப்பட்ட திருத்தத்தின் 09 வது அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டதுடன், சொல்லப்பட்ட அதிகாரங்கள் 3 பகுதிகளாக பிரித்தொதுக்கப்பட்டிருந்தன.

மாகாண சபைகளுக்கு மட்டும் உரித்தான அதிகாரங்கள் மாகாண சபை நிரலில் காட்டப்பட்டிருந்ததுடன், இவ்விடயங்களுக்குரிய சட்டவாக்கங்களை மேற்கொள்ளும் அதிகாரம் மாகாண சபைகளுக்கு மட்டும் உரித்தாயின. ஒருங்கியை நிரலில் குறித்த விடயங்கள் தொடர்பான அதிகாரம் பொதுவாக மாகாண சபைகள், பாராளுமன்றம் ஆகிய இருவகை நிறுவனங்களுக்கும் பொதுவாக உரித்தானதாக இருந்தது. மூடிய நிரலுக்குரிய விடயங்கள் தொடர்பான அதிகாரம் பாராளுமன்றத்திற்கு மாத்திரம் உரித்தானதாக இருந்தது.

இந்த 13 ஆவது அரசியலமைப்புக்கான திருத்தம் ஓர் அவசர வரைவாகக் கொண்டுவரப்பட்டது. அதன்படி, இது தொடர்பான உயர்நீதிமன்றத்தின் அபிப்பிராயம் கோரல் ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்படுவதுடன், அச்சந்தர்ப்பத்தில் அதற்கெதிரான மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்டிருந்தமையால் இது தொடர்பாக இரு தரப்பினரதும் கருத்தறிந்த பின் திருத்தங்களுடன் அதற்கு உயர்நீதிமன்ற அனுமதி கிடைத்தது. எனினும், இவ்வழக்குத் தீர்ப்பு இலங்கையின் நீதித்துறை வரலாற்றில் மிகவும் அலசப்பட்ட ஒன்றாக இருப்பதுடன், இற்றைவரையில் குறித்த வழக்குத் தீர்ப்பு தொடர்பில் கடும் அபிப்பிராய பேதம் நிலவுகிறது.


Northern
North
Central
North
Western
Eastern
Central
Uva
Western
Sabaragamuwa
Southern

1. வட மாகாணம்
யாழ்ப்பாணம், வன்னி,
கிளிநொச்சி



2. கிழக்கு மாகாணம்
திருகோணமலை,
மட்டக்களப்பு, அம்பாறை



3. வட மத்திய மாகாணம்
அநுராதபுரம்,
பொலன்னறுவை



4. மத்திய மாகாணம்
கண்டி, மாத்தளை,
நுவரெலியா



5. ஊவா மாகாணம்
பதுளை, மொனராகலை



6. சப்ரகமுவ மாகாணம்
கேகாலை, இரத்தினபுரி



7. வடமேல் மாகாணம்
புத்தளம், குருநாகல்




8. மேல் மாகாணம்
கொழும்பு, கம்பஹா,
களுத்துறை



9. தென் மாகாணம்
காலி, அம்பாந்தோட்டை
மாத்தறை





எவ்வாறிருப்பினும், சொல்லப்பட்ட திருத்தத்தின் பிரகாரம், இலங்கை 09 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. அவற்றின் விபரம் வருமாறு:

1. வட மாகாணம் - யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி
2. கிழக்கு மாகாணம் - திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை
3. வடமத்திய மாகாணம் - அநுராதபுரம், பொலனறுவை
4. மத்திய மாகாணம் - கண்டி, மாத்தளை, நுவரெலியா
5. ஊவா மாகாணம் - பதுளை, மொனராகலை
6. சப்ரகமுவ மாகாணம் - கேகாலை, இரத்தினபுரி
7. வடமேல் மாகாணம் - புத்தளம், குருணாகல்
8. மேல் மாகாணம் - கொழும்பு, கம்பஹா, களுத்துறை
9. தென் மாகாணம் - காலி, அம்பாந்தோட்டை, மாத்தறை

இவ்வாறாக ஒன்பது மாகாணங்களாகக் காண்பிக்கப்பட்டிருந்தபோதும், எட்டு மாகாணங்களுக்கு மட்டுமே மாகாண சபைகள் நிறுவப்பட்டிருந்தன. வடக்கு கிழக்கு ஆகிய இரு மாகாணங்களையும் ஒன்றிணைந்த ஒரு மாகாணமாகக் கருதி சொல்லப்பட்ட இரு மாகாணங்களுக்கும் தனியான ஒரு மாகாண சபை நிறுவப்பட்டது. எனினும், 2006 இல் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவின் சொல்லப்பட்ட 1988 பெப்ரவரி 02 விடுக்கப்பட்ட கட்டளைக்கு சவால்விடுத்து வழக்கொன்று உயர்நீதிமன்றத்தின் முன்னிலையில் தாக்கல்செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு இரு மாகாண சபைகளையும் ஒன்றிணைப்பது பிரஜைகளின் அடிப்படை உரிமையை மீறுகின்ற ஒரு செயலாக இருப்பதால், சொல்லப்பட்ட தீர்மானம் செல்லுபடியாகாது என்றே அச்சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி என்ற 5 மாவட்டங்களாக வட மாகாணம் நிறுவப்பட்டிருந்தபோதும் வட மாகாணமானது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வன்னி என்ற 3 மாவட்டங்கள் எனக் கருதி தேர்தல் நடாத்தப்படுகிறது.

## மாகாண சபைகள் தொடர்பான சட்டம்

1. 1978 ம் ஆண்டுக்கான அரசியலமைப்புக்கான 13 வது திருத்தம்
2. 1987 ம் ஆண்டின் 42 ம் இலக்க மாகாண சபைகள் சட்டமும் அதன் திருத்தங்களும்.
3. 1988 ம் ஆண்டின் 03 ம் இலக்க மாகாண சபைத் தேர்தல் சட்டம்:
   i. 1988 ம் ஆண்டின் 35 ம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம்
   ii. 1988 ம் ஆண்டின் 55 ம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம்
   iii. 1990 ம் ஆண்டின் 29 ம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம்
   iv. 1993 ம் ஆண்டின் 07 ம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம்
   v. 2004 ம் ஆண்டின் 05 ம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச் சட்டம்)
4. தேர்தல்கள் ஆணையாளரினால் காலத்திற்குக்காலம் வெளியிடப்படும் ஒழுங்குவிதிகளும் சுற்றுநிருபங்களும் வர்த்தமானி அறிவித்தல்களும்.

இந்நூலில் மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பான 1988 ம் ஆண்டின் 02 ம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டமும் பின்னர் அச்சட்டத்தில் கொண்டுவரப்படட் திருத்தங்களும் பற்றி மட்டும் பிரதானமாக அலசப்படுகிறது.

## மாகாண சபை உறுப்பினர்கள்

*(03 மற்றும் 61(அ) பிரிவு, 1987/42 மாகாண சபைகள் சட்டமும் 2004/05 திருத்தமும்)*

மாகாண சபையொன்றின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 1987 ம் ஆண்டின் 42 ம் இலக்கச் சட்டத்தின் பிரிவு 02 இன் பிரகாரம் ஜனாதிபதியினால் நிச்சயிக்கப்படுகிறது. அத்தீர்மானத்தின்போது அந்தந்த

மாகாணத்தின் நிலப்பரப்பும் சனத்தொகையும் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

அவ்வெண்ணிக்கையின் அடிப்படையில் தேர்தல்கள் ஆணையாளரினால் சொல்லப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை குறித்த அறிவித்தலொன்று வெளியிடப்படும்.

அவ்வாறு தீர்மானிக்கப்படும் எண்ணிக்கைக்கு மேலதிகமாக, ஒவ்வொரு மாகாணத்திலும் அதிகூடிய எண்ணிக்கையான வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் அரசியல் கட்சியொன்றுக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு மிகுதி ஆசனங்கள் (Bonus Seats) இரண்டும் உரித்தாகும்.

அவ்விரண்டு ஆசனங்களுக்கும் நியமனப்பத்திரத்தில் காணப்படுகின்ற போதிலும் தெரிவுசெய்யப்படாத வேட்பாளர்கள் மத்தியிலிருந்து பெயர்குறிப்பதை அரசியல் கட்சியொன்றாயின், அதன் செயலாளரும் சுயேச்சைக் குழுவொன்றாயின் அதன் தலைவரும் மேற்கொள்ள வேண்டும்.

**வாக்கெடுப்புப் பிரிவும் வாக்கெடுப்பு மாவட்டமும்** (பிரிவு 4)

1980 ம் ஆண்டின் 44 ம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின்கீழ் இன்று செயல்வலுப்பெறும் வாக்கெடுப்புப் பிரிவும் வாக்கெடுப்பு மாவட்டங்களும் (வாக்குச்சாவடி பிரதேசம்) மாகாண சபைத் தேர்தல்களுக்கும் பயன்படுத்தப்படும். சகல நிருவாக மாவட்டங்களும் தேர்தல் நோக்கில் ஒரு வாக்கெடுப்புப் பிரிவாகக் கருதப்படும்.

**தேருநர் இடாப்பு** (பிரிவு 5)

நியமனம் பற்றிய அறிவித்தல் கொடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் நடைமுறையிலிருந்த தேருநர் இடாப்பு இதற்காக பயன்படுத்திக்கொள்ளப்படும்.

ஆளொருவருக்கு வாக்களிக்க உரிமை கிடைக்கின்றதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் தீர்மானகரமான சான்று யாதெனில், 1980 ம் ஆண்டின் 44 ம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்வதற்கான சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட தேருநர் இடாப்பாகும். அதாவது,

அவ்வாவணத்தில் பெயர்கள் உள்ளடக்கப்பட்டிரும் அனைவரும் வாக்களிக்கத் தகுதியானவர்கள் ஆவர்.

**தெரிவத்தாட்சி அலுவலர்** (பிரிவு 7)

தேர்தல்கள் ஆணையாளரினால் ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திற்கும் தெரிவத்தாட்சி அலுவலர் ஒருவரும் அவருக்கு உதவியாக இருக்கும் பொருட்டு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் சிலரும் நியமிக்கப்படுவர்.

மாவட்டச் செயலாளரே (அரசாங்க அதிபர்) தெரிவத்தாட்சி அலுவலராக நியமிக்கப்படுவார். உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் ஒருவரான உதவித் தேர்தல்கள் ஆணையாளர், குறித்த மாவட்டத்தின் தேர்தல் நடவடிக்கைகளை ஒழுங்குசெய்வது பற்றிய பிரதான பொறுப்பை வகிப்பவராவார்.

**மாகாண சபை உறுப்பினரொருவராக இருப்பதற்கான தகுதியீனங்கள்** (பிரிவு 9)

(1987 ம் ஆண்டின் 42 ம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் பிரிவு 3 மற்றும் அரசியலமைப்பின் பிரிவு 91 என்பன ஏற்புடைத்தாகும்)

1. இலங்கைப் பிரசை அல்லாதவர்.
2. 18 வயது நிறைவெய்தாதவர்.
3. சித்தசுவாதீனமற்றவரென ஏதேனும் சட்டத்தின் பிரகாரம் தீர்மானிக்கப்பட்டவர்.
4. இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத ஒரு காலப்பிரிவுக்கான சிறைத்தண்டனையால் தண்டிக்கப்படத்தக்க தவறொன்றுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு, ஆறு மாதங்களுக்குக் குறையாத ஒரு காலப்பிரிவுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டோரும், மரண தண்டனைக்குப் பதிலீடாக சிறைத்தண்டனையொன்றை அனுபவித்துவருவோரும், கடந்த ஏழாண்டு காலத்தில் சொல்லப்பட்ட தண்டனையை முழுமையாக அனுபவித்து முடித்தோரும் (எனினும், நிபந்தனைக்குட்பட்ட மன்னிப்பைப் பெற்றவர்கள் (கட்டற்ற மன்னிப்பு) தோற்றலாம்)

5. மக்கள் கருத்துக் கணிப்பொன்றில் அல்லது ஜனாதிபதித் தேர்தலொன்றில் அல்லது பாராளுமன்றத் தேர்தலொன்றில், யாதேனுமொரு சட்டத்திற்கு முரணான செயலுடன் அல்லது ஊழல் பழக்கத்துடன் தொடர்பிருந்து நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தினத்திலிருந்து ஏழாண்டு காலம் கழியாதவர்கள்.
6. உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்கள் சட்டத்தின்கீழ் நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு ஏழாண்டு காலம் கழியாதவர்கள்.
7. அரசாங்க நிறுவனமொன்றில் ஊழல் நடவடிக்கை தொடர்பில் சட்டத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு ஐந்தாண்டு காலம் கழியாதவர்கள்.
8. மக்கள் கருத்துக்கணிப்பொன்றில் அல்லது ஜனாதிபதித் தேர்தலொன்றில் அல்லது பாராளுமன்றத் தேர்தலொன்றில், யாதேனுமொரு சட்டத்துக்கு முரணான செயலுக்கு நேரொத்ததாக அமையக்கூடிய தவறொன்றுக்காக குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு மூன்றாண்டு காலம் கழியாதவர்கள்.
9. பாராளுமன்றத்தினால் குடியியல் தகைமையீனத்துக்கான பிரேரணையொன்று நிறைவேற்றப்பட்டு, குறித்துரைக்கப்பட்ட தகைமையீனக் காலம் கழியாதவர்கள்.
10. பொய்ச் சாட்சியமளித்தல், குற்றமொன்று பற்றிய தகவலை வெளிப்படுத்தாமை, குற்றமொன்று பற்றிய போலியான தகவல்களை வழங்குதல், சாட்சி விசாரணையொன்றுக்கு அவசியப்படும் ஆவணங்கள்/காண்பிப்புப் பொருள்களை அழித்தொழித்தல் ஆகியவற்றுடன் தொடர்பான தவறொன்றுக்காக குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு ஏழாண்டு காலம் கழியாதவர்கள்.
11. விஷேச ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றின் நியதிகளின்படி, ஆணைக்குழுவின் முன்னிலையில் ஆஜராகாமை, சத்தியப் பிரமாணம்செய்தல்/உறுதியுரை பகர்வதைத் தட்டிக்கழித்தல், வினவப்பட்ட வினாவுக்குப் பதிலிறுக்காமை, தம்வசமுள்ள ஆவணங்கள்/ காண்பிப்புப்பொருள்கள்/ தகவல்களைச் சமர்ப்பிக்காமை முதலியன மூலம் ஆணைக்குழுவுக்கு பங்கம் விளைவித்த சார்த்துதல்களுக்காக குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு ஏழாண்டு காலம் கழியாதவர்கள்.

12. ஜனாதிபதி, பாராளுமன்ற உறுப்பினர்கள், வேறு உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆகியோர்.
13. நீதிமன்ற அலுவலர்கள்.
14. நிருவாக விடயங்களுக்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்)
15. பாராளுமன்ற செயலாளர் நாயகம் அல்லது அவரது பணியாட்டொகுதியைச் சேர்ந்தவர்கள்.
16. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்.
17. தேர்தல்கள் ஆணையாளர்.
18. கணக்காய்வாளர் தலைமை அதிபதி.
19. 1970.11.18 ம் திகதி ஆரம்ப வருடாந்த வேதனம் ரூ.6700 க்குக் குறையாததாக அமைந்த பதவி வகிக்கும் அரசாங்க அலுவலர்கள்.
20. 1970.11.18 ம் திகதி ஆரம்ப வேதனம் ரூ.7200 க்குக் குறையாததாக அமைந்த அரச கூட்டுத்தாபனங்களின் அலுவலர்கள்.
21. முப்படைகளினதும் உறுப்பினர்கள்.
22. பொலிஸ் அலுவலர்கள், கிராம விதானையார், கிராம சேவை அலுவலர்கள் மற்றும் அப்பணிகளை நிறைவேற்றுவதற்கான அரசாங்க அலுவலர்கள்.
23. அரசாங்கத் திணைக்களம்/அரச கூட்டுத்தாபனம் ஒன்றுடன் யாதேனும் ஓர் ஒப்பந்தம்செய்துகொண்டுள்ளவர்கள்.
24. வங்குரோத்துநிலையடைந்தவர்கள் எனப் பகிரங்கப்படுத்தப்பட்டவர்கள்.
25. கடந்த ஏழாண்டு காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக இருப்பதன்நிமித்தம் இலஞ்சம்/அவாநிறைவை ஏற்றுக்கொண்ட ஒருவர் என்ற வகையில் நீதிமன்றமொன்றினால் /விஷேட ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றினால் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள்.
26. உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலொன்றின்போது யாதேனுமொரு சட்டத்தின்கீழ் வாக்களிக்கத் தடைசெய்யப்பட்டவர்கள்.
27. இரு மாகாண சபைகளுக்கு/அதனைவிடக் கூடுதலானவற்றுக்கு ஒரே தடவையில் வேட்பாளர்களாக வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளவர்கள்.

28. அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சி/சுயேச்சைக் குழுக்கள் பலவற்றிலிருந்து வேட்புமனுக்களைத் தாக்கல்செய்துள்ள வேட்பாளர்கள்.

**நியமனங்கள்** (பிரிவுகள் 10, 11)

ஒரு மாகாண சபை கலைக்கப்பட்டு, ஒரு வார காலத்துள் தேர்தலொன்றை நடாத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளிடமிருந்தும் சுயேச்சைக் குழுக்களிடமிருந்தும் நியமனப் பத்திரங்கள் கோரப்படல் வேண்டும்.

அந்தந்த மாகாண சபையின் ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படவுள்ள பிரதிநிதிகளின் எண்ணிக்கையையும் அதற்காக நியமனப்பத்திரம் கையளிக்கப்படவேண்டிய நாள் மற்றும் கால வரையறையைக் குறிப்பிடும் அறிவித்தலொன்று தேர்தல்கள் ஆணையாளரினால் வெளியிடப்படல் வேண்டும்.

மேற்சொன்னவாறு அவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்கள் கழித்து, அவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து 21 வது நாள் நண்பகல் 12 மணியுடன் முடிவடையும் காலப்பகுதியினுள் நியமனப்பத்திரங்கள் கையேற்கப்படும்.

நியமனப்பத்திரமொன்றைக் கையேற்பது நிராகரிக்கப்படின், தெரிவத்தாட்சி அலுவலர் அதனை முன்வைத்த நபருக்கு அது பற்றி அறிவிக்க வேண்டும்.

*மோசடிச் செயலொன்றுக்கு தவறாளியாகக் காணப்படுவதன் காரணமாகவோ அல்லது பாராளுமன்ற அல்லது ஜனாதிபதித் தேர்தல் மனு விசாரணையொன்றில் தவறாளியாகக் காணப்படுவதன் காரணமாகவோ சமூக இயலாமைநிலையில் இருப்பதன் காரணமாகவோ வேட்பாளர் ஒருவராவதற்கு தான் தகுதியற்றவர் என்பதை அறிந்தநிலையிலும் நியமனப்பத்திரமொன்றில் பெயரை உட்படுத்திய ஆளொருவர் தவறாளியாவதுடன், 1000 ரூபாவுக்கு மேற்படாத தண்டப்பணம் ஒன்றுக்கு அல்லது மூன்று மாத காலம் வரையான மறியற்றண்டனையொன்றுக்கு உட்படுத்தப்படுவார்.*

**நியமனப்பத்திரம் தயாரிக்கவேண்டிய விதம்** (பிரிவு 13)

(அ) ஒரு நியமனப்பத்திரமும் அதன் பிரதியொன்றும் மட்டுமே சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(ஆ) நியமனப் பத்திரம் முதலாம் அட்டவணையிலுள்ள 'அ' படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படல் வேண்டும்.

(இ) குறித்த நிருவாக மாவட்டத்திலிருந்து தெரிவுசெய்யப்படவுள்ள உறுப்பினர்களுக்கு மேலதிகமாக 03 வேட்பாளர்களின் பெயர்கள் முந்துரிமை ஒழுங்குமுறைப்படி அதில் உட்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஈ) அந்தந்த வேட்பாளர்களின் எழுத்திலான சம்மதத்தைத் தெரிவிக்குமுகமாக அதில் ஒப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(உ) அரசியலமைப்பின் 07 ம் அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாக சத்தியக் கடதாசியொன்றில்/ உறுதிமொழியொன்றில் ஒப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஊ) சுயேச்சைக் குழுவொன்றின் நியமனப் பத்திரத்துடன் நியமனப் பத்திரத்திலுள்ள ஒவ்வொரு வேட்பாளர் சார்பாகவும் ரூ.2000 வீதம் கட்டுப்பணமொன்றைச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(எ) அரசியல் கட்சிகளின் நியமனப்பத்திரங்களில் கட்சியின் செயலாளராலும், சுயேச்சைக் குழுவொன்றாயின், நியமனப் பத்திரத்தில் முந்துரிமை ஒழுங்குமுறைப்படி முதலில் பெயர் குறிப்பிடப்படும் வேட்பாளராலும் ஒப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஏ) சமாதான நீதவான் ஒருவரால்/பிரசித்த நொத்தாரிசு ஒருவரால் நியமனப்பத்திரம் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஐ) தெரிவத்தாட்சி அலுவலரிடம் உரிய காலத்தினுள் நியமனப் பத்திரங்கள் கையளிக்கப்படல் வேண்டும்.

(ஒ) கட்சியின் நியனப்பத்திரம், கட்சியின் செயலாளர்/அதிகாரம்பெற்ற முகவர் என்றழைக்கப்படும் நியமனப் பத்திரத்தில் முந்துரிமை ஒழுங்குமுறைப்படி முதலாவதாக பெயர் குறித்துரைக்கப் பெறுநராலேயே கையளிக்கப்படல் வேண்டும். சுயேச்சைக் குழுவொன்றின் நியமனப்பத்திரம், அதன்கண் முதலாவதாக பெயர் குறித்துரைக்கப்பெறுநரால் கையளிக்கப்படல் வேண்டும்.

யாதேனுமொரு காரணத்தால் மேற்சொன்ன ஆளினால் நியமனப் பத்திரத்தைக் கையளிக்க முடியாமல்செல்லும்பட்சத்தில், வேட்பாளர் பட்டியலில் இரண்டாவதாகப் பெயர்குறித்துரைக்கப்பட்டுள்ள ஆளினால் அது கையளிக்கப்படலாம்.

தெரிவத்தாட்சி அலுவலரால் கையேற்கப்பட்ட ஒவ்வொரு நியமனப் பத்திரத்தினதும் பிரதி, தமது அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

சமர்ப்பிக்கப்பட்ட நியமனப்பத்திரமென்றில் யாதேனுமொரு வழு/விடுபாடு இருப்பதாக அதனைச் சமர்ப்பித்தவருக்குத் தோன்றினால், நியமனப்பத்திரத்தைத் தாக்கல்செய்வதற்கான காலக்கெடு முடிவுற முன்னர் அதனைத் திருத்திக்கொள்ள தெரிவத்தாட்சி அலுவலரிடம் விண்ணப்பமொன்றைச் செய்யலாம். சொல்லப்பட்ட வழு/விடுபாடு தற்செயலாக கவனக்குறைவினால் ஏற்பட்டதொன்றெனக் கருதப்படின், அவரது முன்னிலையில் அதனைத் திருத்திக்கொள்ள வாய்ப்பளிக்கப்படலாம்.

எனினும், வேட்பாளர் ஒருவரின் பெயர் விடுபாடு, வேட்பாளர் ஒருவர் தமது சம்மதத்தைத் தெரிவிக்குமுகமாக அதில் ஒப்பமிடத் தவறுதல், அரசியல் கட்சியின் செயலாளர்/குழுத் தலைவர் ஒப்பமிடத் தவறுதல் அன்றேல் சமாதான நீதவான் ஒருவர் /பிரசித்த நொத்தாரிசு ஒருவர் அத்தாட்சிப்படுத்தி ஒப்பமிடத் தவறுதல் ஆகிய தற்செயலாக நிகழ்ந்த தவறுகளைத் திருத்தியமைக்க எவ்விதத்திலும் வாய்ப்பளிக்கப்பட மாட்டா.

**வைப்புப்பணங்களைச் செலுத்துதல்** (பிரிவுகள் 14, 15, 16)

நியமனப்பத்திரங்கள் கையேற்கப்படும் இறுதித் தினத்திற்கு நேர்முந்திய தினத்தன்று நண்பகல் 12.00 மணிக்கு முன்பதாக சுயேச்சைக் குழுவொன்றினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஒவ்வொரு வேட்பாளர் சார்பாகவும் ரூ.2000 வீதம் தெரிவத்தாட்சி அலுவலரிடம் வைப்புப் பணம் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். சொல்லப்பட்ட பற்றுச்சீட்டில்,

1. வைப்புப்பணத்தைச் செலுத்தியவரின் பெயர்
2. வேட்பாளர்களின் எண்ணிக்கை
3. வைப்புப்பணத்தொகை
4. வைப்பிலிடப்பட்ட திகதி, நேரம்

முதலிய விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்

சுயேச்சைக் குழுவின் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் இக்கொடுப்பனவு மேற்கொள்ளப்படல் வேண்டும். எக்காரணங்கொண்டும் குறித்த காலப்பகுதிக்கு முன்னரும் அல்லது பின்னரும் (விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் செலுத்தப் பட்டாலொழிய) அதிகாரம்பெற்ற ஆளெவராலும் முன்வைக்கப்படும் வைப்புப்பணம் எதுவும் தெரிவத்தாட்சி அலுவலரால் ஏற்றுக்கொள்ளப்-படலாகாது.
அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சியினால் பிணைப்பணமாக எந்தவொரு வைப்புப் பணத்தொகையும் வைப்பிலிடப்பட வேண்டியதில்லை.

சுயேச்சைக் குழுவொன்றின் நியமனப்பத்திரம் நிராகரிக்கப்படுமாயின், அவர்களின் பிணைப்பணம்/வைப்புப்பணம் அதனை வைப்பிலிட்டோருக்கு மீளளிக்கப்படல் வேண்டும். அதேபோல், தேர்தல் முடிவு வெளியிடப்பட்ட பின்னர் வைப்புப்பணம் (வைப்புக் கணக்கிலிருந்து திரட்டு நிதியத்திற்கு மாற்றப்பட்டு) அரசுடைமையாக்கப்படவில்லை எனில், அத்தொகை சொல்லப்பட்ட குழுவுக்கு தாமதமின்றி மீளளிக்கப்படல் வேண்டும்.

**நியமனப்பத்திரத்தின் மாதிரியமைப்பு**

.................................................................................................. மாகாண சபையின் .......................................................................................... நிருவாக மாவட்டத்திற்கான நியமனப்பத்திரம், அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சியாகவுள்ள அல்லது சுயேச்சைக் குழுவாகவுள்ள ................................................................... இன் (சுயேச்சைக் குழுவொன்றன் விடயத்தில்) இதனகத்துப்பின்னர் பெயர் குறிப்பீடுசெய்யப்படும் ஆள்களினால், மேலே சொல்லப்பட்ட நிருவாக மாவட்டத்திலிருந்து மாகாண சபைக்கு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான வேட்பாளர்களாக பின்வரும் ஆள்களை இத்தால் பெயர்குறிப்பீடுசெய்து நியமனப்பத்திரம் தாக்கல்செய்யப்படுகிறது.

1. வேட்பாளரின் பெயர்:
2. முகவரி:
3. தொழில்:
4. தனது சம்மதத்தைத் தெரிவித்தல் மற்றும் தேர்ந்தெடுக்கப் படுவதற்காக தன்னிடம் எவ்வித தகைமையீனமும் கிடையாது என்பதற்கான வேட்பாளரின் ஒப்பம்.

மேற்சொல்லப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர்/குழுவின் தலைவரான ........................................................................................................ என்பவரால் .................. ஆம் ஆண்டு ......................................... ஆம் மாதம் .................. ஆம் நாளாகிய இன்று ........................................ இல்வைத்து எனது முன்னிலையில் ஒப்பமிடப்பட்டது.
............................................................ அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரின்/குழுத்தலைவரின் ஒப்பம்.

பெயர்: ..........................................................................................................
முகவரி: .......................................................................................................

.......................................................................
சமாதான நீதவான்/பிரசித்த நொத்தாரிசு

**போட்டியில்லாத் தேர்தல்** (பிரிவு 18)

யாதேனுமொரு நிருவாக மாவட்டத்திற்கான நியமனப்பத்திரம் தாக்கல்செய்யப்படுமிடத்து, ஒரேயொரு வேட்பாளர் பட்டியல் மட்டும் பெறப்படின், சொல்லப்பட்ட பட்டியல் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கலாம். அதன்பின், குறித்த பட்டியலிலிருந்து உறுப்பினர்களாக யாரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை சொல்லப்பட்ட நியமனப்பத்திரத்தைச் சமர்ப்பித்த கட்சியின் செயலாளரிடம் அல்லது சுயேச்சைக் குழுவின் தலைவரிடம் விசாரிக்க வேண்டும். அவ்வேளை, பதில் கிடைக்காவிடின், வேட்பாளர் பெயர்ப்பட்டியலிலுள்ள ஒழுங்குவரிசைப்படி உரிய வேட்பாளர்

எண்ணிக்கையைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் அந்த மாவட்டத்தின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக வெளிப்படுத்தப்படலாம்.

**நியமனப்பத்திரம் எதுவும் பெறப்படாதவிடத்து** (பிரிவு 19)

குறித்த காலப்பகுதியினுள் எந்தவொரு நியமனப்பத்திரமும் ஏற்றுக்கொள்ளப்படாதவிடத்து அல்லது எவையும் சமர்ப்பிக்கப்படாதவிடத்து, நியமனப்பத்திர தாக்கல் காலப்பகுதி கழித்து ஏழு நாட்களுக்குள் இரண்டாவது நியமனப்பத்திர தாக்கலுக்கான தினமொன்று தேர்தல்கள் ஆணையாளரினால் விதித்துரைக்கப்படல் வேண்டும். அவ்வாறு இரண்டாவது தடவையாக குறித்துரைக்கப்பட்ட நியமனப்பத்திரங்களைக் கையேற்பது, அதற்கான அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து ஏழு நாட்களுக்கும், பதின்நான்கு நாட்களுக்கும் (7-14) இடைப்பட்ட காலத்தில் இடம்பெற வேண்டும். இறுதித் தினத்தன்று நண்பகல் 12.00 மணிக்கு நியமனப்பத்திரம் கையேற்றல் முடிவுறுத்தப்படல் வேண்டும்.

**போட்டியில்லாத் தேர்தல்** (பிரிவு 20)

இரண்டு/அதற்குக் கூடுதலான எண்ணிக்கையிலான நியமனப்பத்திரங்கள் கையளிக்கப்படுமிடத்து, குறித்த ஒவ்வொரு கட்சிக்கும் அனுமதிக்கப்பட்ட சின்னங்களுடன் வெவ்வேறாக அவை கையளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

சுயேச்சைக் குழுக்களாயின், அவற்றுக்குரிய இலக்கங்களும், சின்னங்களும் குறித்துரைக்கப்படுமிடத்து, குழுக்களின் தலைவர்களிடையே ஒருப்பாடு நிலவவில்லையெனில், யாதேனுமொரு திருவுளச்சீட்டு முறைமூலம் அதனை நிறைவேற்ற வேண்டும்.

ஒரு கட்சிக்கு ஒதுக்கப்பட்ட சின்னத்தை, எக்காரணங்கொண்டும் பிறிதொரு கட்சி/சுயேச்சைக் குழு பெற்றுக்கொள்ள முடியாது.

நியமனப்பத்திரம் சமர்ப்பிக்கப்படும் வேளையில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர், அவரது அதிகாரம்பெற்ற முகவர், குழுத்தலைவர், நியமனப்பத்திரத்தில் இரண்டாவதாக பெயர்குறிப்பீடு செய்யப்பட்ட வேட்பாளர் ஆகியோருக்கும், ஒவ்வொரு வேட்பாளர் பட்டியல்

சார்பாகவும் தெரிவுசெய்யப்பட்ட பிறிதொருவருக்கும் அவ்வேளை சமுகமாயிருப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. (உறுப்புரை 21)

நியமனப்பத்திரங்களைக் கையேற்கும் நடவடிக்கை நிறைவெய்தியதும், தெரிவத்தாட்சி அலுவலரால் ஒவ்வொரு பட்டியலிலும் பெயர் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வேட்பாளர்களின் பெயர்களை சிங்கள அகரவரிசைப்படி தயாரித்து, ஒவ்வொரு வேட்பாளருக்கும் எண்வரிசைப்படி இலக்கம் வழங்கப்படல் வேண்டும். அவ்வாறே, சுயேச்சைக் குழுக்களை இனங்காண்பதற்கான இலக்கங்களும் வழங்கப்படல் வேண்டும்.

நிருவாக மாவட்டத்தின் ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரிவுக்கும் வாக்குச்சாவடிகளை (polling booths) நிறுவுதல் பற்றியும் வாக்காளர்களுக்கு விசேட வாக்கெடுப்பு நிலையங்கள் நிறுவப்படுமாயின், அவை பற்றியும் குறிப்பிட்டு வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்படல் வேண்டும்.

**நியமனத்தின் பின்னர் வேட்பாளர் இறந்துபோதல் (பிரிவு 23)**

நியமனப்பத்திரங்கள் கையளிக்கப்பட்ட தினத்திற்கும் தேர்தலை நடாத்தும் தினத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் யாதேனுமொரு வேட்பாளர் இறப்பெய்தின், குறித்த ஆளின் பெயர் உள்ளடக்கப்பட்ட வேட்பாளர் பெயர்ப்பட்டியல் தள்ளுபடி செய்யப்படவோ/புதிதாக நியமனப்பத்திரம் கோரப்படவோ மாட்டா. 03 மிகையான பெயர்கள் வேட்பாளர் பெயர்ப்பட்டியில் உள்ளடக்கப்பட்டிருப்பதே அதற்குரிய காரணமாகும்.

# தேர்தல் தவறுகள்

**நியமனப்பத்திரங்கள், வாக்குச்சீட்டுக்கள் தொடர்பான தவறுகள்** (பிரிவுகள் 66, 67)

1. மோசடியாக நியமனப்பத்திரமொன்றைப் புனைதல், தந்திரோபாயமாக உருச்சிதைத்தல், மோசடியாகத் தயாரித்த நியமனப்பத்திரமொன்றை தான் நன்கறிந்த நிலையிலும் தெரிவத்தாட்சி அலுவலரிடம் கையளித்தல்.
2. வாக்குச்சீட்டொன்றை/வாக்குச்சீட்டொன்றிலுள்ள அலுவலகமுறை குறியீட்டைப் போலியாகக் கையாண்டு புனைதலும், வாக்குச்சீட்டொன்றைச் சிதைத்தழித்தலும்.
3. அதிகாரமின்றி பிறிதொருவருக்கு வாக்குச்சீட்டொன்றைக் கைமாற்றுதல்.
4. வாக்குச்சீட்டுக்களை விற்பனைசெய்தலும் கொள்வனவுசெய்தலும் அதற்கான முனைப்பும்.
5. அலுவலகமுறை குறியீடு பொறிக்கப்பட்ட வாக்குச்சீட்டொன்றை தன்வசம் வைத்திருத்தல்.
6. குறியிடப்பட்ட வாக்குச்சீட்டொன்றை வாக்கெடுப்பு நிலையத்தில் ஏனையோருக்கு வேண்டுமென்றே காண்பித்தல்.
7. வாக்குச்சீட்டல்லாத வேறெதனையும் வாக்குச்சீட்டுப் பெட்டியினுள் இடுதல்.
8. வாக்குச்சீட்டொன்றை வாக்கெடுப்பு நிலையத்திற்கு வெளியே எடுத்துச்செல்லல்/வாக்கெடுப்பு நிலையத்திற்கு வெளியில் தன்வசம் வைத்திருத்தல்.
9. வாக்குச்சீட்டுப் பெட்டியொன்றையோ/வாக்குச்சீட்டுக்களின் பொதியொன்றையோ முறையான அதிகாரமின்றி திறந்துபார்த்தலும் உருச்சிதைத்தலும்.
10. கள்ளவாக்குச்சீட்டுக்களை அச்சிடல்.
11. வாக்குச்சீட்டுப் பெட்டியிலிருந்து வாக்குச்சீட்டுக்களைக் குடைந்து வெளியே எடுப்பதற்கன உபகரணமொன்றை உருவாக்குதல், இறக்குமதிசெய்தல், வழங்குதல்.

12. அஞ்சல் வாக்காளர்களுக்கான ஆளடையாளத்தை எண்பிப்பதற்கான வெளிப்படுத்தல்களின்போது பொய்யான தகவல் வழங்குதல்.
13. அஞ்சல் வாக்காளர்களுக்கு அனுப்பிவைக்கப்படும் மூடிய கடிதவுறைகள், வாக்குச்சீட்டு கடிதவுறைகள் முதலியவற்றை உரிமையின்றித் திறந்துபார்த்தலும், எடுத்துக்கொள்ளலும், அழித்தொழித்தலும்.
14. உத்தியோகபூர்வ தேர்தல் வாக்காளர் அட்டைகளை கள்ளத்தனமாக அச்சிடல்.
15. வாக்குச்சீட்டில் வாக்காளரை இனங்காணக்கூடிய விதத்திலான குறியீடுகளை இடல்.
    - ★ ***தோதான குறியீடு – அழிக்கமுடியாத மையினால் இடப்பட்ட ஒரு குறியீடு.***
16. வாக்களிக்க தமக்கு அதிகாரம் இல்லை என அறிந்தநிலையிலேயே கள்ளவாக்குப் போடுதல்.
17. பிரசாவுரிமை நீக்கப்பட்ட ஆளொருவர் வாக்களித்தல்.

**மேற்சொன்ன தவறுகளுக்கான தண்டனை** – இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்திற்கு கடூழிய அல்லது கடூழியமற்ற சிறைத்தண்டனையும், தவறாளியாகக் காணப்படும் தினத்திலிருந்து ஏழாண்டுகள் கழியும் வரை வாக்காளரொருவராக இருத்தல், வாக்களித்தல் அல்லது உறுப்பினர் ஒருவராக இருத்தல் தடையாகும். தவறாளியாகக் காணப்படுமிடத்து, மாகாண சபை உறுப்பினரான ஒருவர் அன்றைய திகதி முதல் பதவியிலிருந்து வெளியேற்றப்படுவார்.

**தேர்தல் தினத்தன்று தடைசெய்யப்பட்ட செயல்கள் (பிரிவு 68)**

1 – வாக்குச்சாவடி எல்லைக்குள் அல்லது வாக்குச்சாவடியிலிருந்து அரை கிலோ மீற்றர் தூரத்துள் இடம்பெறும் தவறுகள்.

2 – யாதேனுமொரு கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு வாக்களிக்க வேண்டாமென அழுத்தம்கொடுத்தல்.

3 – வாக்களிக்கவேண்டாமெனத் தூண்டுதல்.

4 – கட்சிகளுக்கு அல்லது குழுக்களுக்கு உரிய அலுவலகமுறை குறியீடுகளை விநியோகித்தலும் யாதேனும் பிரசார பிரசுரங்கள், அறிவித்தல்கள், புகைப்படங்கள் முதலியவற்றைக் காட்சிப்படுத்துதலும் அல்லது விநியோகித்தலும்.

5 - வாக்களிப்பதற்கு வாக்குச்சாவடிக்கு வரும் ஆளொருவருக்கு அல்லது வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு இடைஞ்சலாக அமையக்கூடிய விதத்தில் செயற்படல்.

6 - வாக்குச்சாவடியில் அல்லது வாக்குச்சாவடியின் நுழைவாயிலுக்கு அருகாமையில் நிகழும் யாதேனும் பொது அல்லது தனிப்பட்ட இடமொன்றிலிருந்து மெகாபோன், ஒலிபெருக்கிக் கருவி அல்லது அவ்வாறானதோர் உபகரணத்தைப் பயன்படுத்தல்.

7 - வாக்குச்சாவடியில் அல்லது வாக்குச்சாவடியின் நுழைவாயிலுக்கு அருகாமையிலுள்ள பொது அல்லது தனிப்பட்ட ஓரிடத்திலிருந்து உரத்து சப்தமெழுப்புதல் அல்லது வேறு பண்பாடற்ற முறையில் நடந்துகொள்ளல்.

**மேற்சொன்ன தவறுகளுக்கான தண்டனை** – மேற்சொன்ன தவறுகளைப் புரியும் ஆளொருவருக்கு அல்லது அதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளும் ஆளொருவருக்கு நூறு ரூபா தண்டப்பணமோ அல்லது கடூழிய அல்லது கடூழியமற்ற ஒரு மாத கால சிறைத் தண்டனையோ அல்லது அவையிரண்டும் விதிக்கப்படலாம்.

**ஊர்வலங்களை நடாத்துதல்** (பிரிவு 69)

நியமனப்பத்திரங்கள் கையேற்கப்படும் முதல் தினத்திலிருந்து தேர்தல் முடிவுகள் வெளியாகி ஒரு வாரம் கழியும் வரை, மதம்சார்ந்ததாக/சமூகம் சார்ந்ததாக நடாத்தப்படும் ஊர்வலங்கள், மே தின ஊர்வலம் அல்லாத தேர்தலை இலக்காகக்கொண்ட வேறெந்த ஊர்வலத்தையும் நடாத்துதல்/ ஒழுங்குசெய்தல்/ பங்கேற்றல் ஒரு தவறாகும்.

**தண்டனை** – தவறிழைக்கும் ஆளொருவருக்கு அல்லது அதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளும் ஆளொருவருக்கு நூறு ரூபா தண்டப்பணம் அல்லது கடூழியத்துடன் அல்லது கடூழியமற்ற ஒரு மாத கால சிறைத்தண்டனை அல்லது அவையிரண்டும் விதிக்கப்படலாம்.

**பொதுக் கூட்டங்கள்** (பிரிவு 70)

தேர்தலுடன் தொடர்பான பொதுக் கூட்டங்கள் யாவும், 48 மணி நேரத்துக்கு முன்னரே நடைபெற வேண்டும். அச்சந்தர்ப்பம் முதல் மாகாண சபை உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டதாக தெரிவத்தாட்சி அலுவலரால் அறிவிக்கப்பட்டு ஒரு வாரம் கழியும் வரை எந்தவொரு பொதுக் கூட்டத்தையும் ஒழுங்குசெய்வது ஒரு தவறாகும்.

**தண்டனை** – தவறிழைக்கும் ஆளொருவருக்கு அல்லது அதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளும் ஆளொருவருக்கு நூறு ரூபா தண்டப்பணம் அல்லது கடூழியத்துடன் அல்லது கடூழியமற்ற ஒரு மாத கால சிறைத்தண்டனை அல்லது அவ்விரண்டும் விதிக்கப்படலாம்.

**தேர்தல் தொடர்பான பிரசுரங்களை அச்சிடல்** (பிரிவு 72)

தேர்தல் சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள், அறிவித்தல்கள் சார்ந்த ஒவ்வொரு அச்சுப்பணியின்போதும், அவற்றை அச்சிட்டு வெளியிடுபவரின் பெயரும் முகவரியும் அவற்றில் குறிப்பிடப்படல் வேண்டும். அவ்வாறன்றி அவற்றை அச்சிடல், வெளியிடல், விநியோகித்தல், ஒட்டுதல் முதலியவற்றில் ஈடுபடும் ஒரு வேட்பாளர் அல்லாத ஆளெவரும் ஒரு தவறாளியாவார்.

**தேர்தல் அலுவலங்கள்** (பிரிவு 73)

**1** - தேர்தல் நடைபெறும் மாவட்டத்தில் ஒரு கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு அறிவித்தல்கொடுக்கப்பட்ட ஒரு தேர்தல் அலுவலகத்தை மட்டுமே வைத்திருக்கலாம். ஒவ்வொரு

வாக்கெடுப்புப் பிரிவுக்கும் அறிவித்தல்கொடுக்கப்பட்ட கிளை அலுவலகம் ஒன்று வீதம் வைத்துக்கொள்ளலாம். இவ்வலுவலகங்கள் யாவற்றையும் முன்னெடுத்துச்செல்வதற்கு நியமனப்பத்திரம் கையளிக்கப்பட்ட நாளிலிருந்து வாக்கெடுப்பு நடைபெறும் தினத்திற்கு நேர்முந்திய தினம் வரை மட்டுமே அனுமதியுள்ளது.

**2** - வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் தம் சார்பாக ஒரு அலுவலகத்தை மட்டுமே வைத்திருக்க முடியும்.

தேர்தலுக்கு நேர் முந்திய தினத்திலும் தேர்தல் தினத்திலும் நிருவாக மாவட்டத்தில் ஓர் அறிவித்தல்கொடுக்கப்பட்ட மத்திய அலுவலகத்தையும் வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் உரிய அலுவலங்களையும் மாத்திரமே வைத்திருக்க முடியும்.

**3** - அதிகாரம்பெற்ற முகவர் ஒருவருக்கு, குழுத் தலைவர் ஒருவருக்கு, வேட்பாளர் ஒருவருக்கு, தனது வசிப்பிடத்தையே தேர்தல் அலுவலகமொன்றாகப் பேணிச்செல்ல முடியும். அதாவது, வேட்பாளர் ஒருவருக்கு தான் வசிக்கும் இடம் தவிர ஒரு தேர்தல் அலுவலகத்தை மட்டுமே வைத்திருக்க முடியும்.

***தண்டனை*** – *தவறிழைக்கும் ஆளொருவருக்கு அல்லது அதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளும் ஆளொருவருக்கு நூறு ரூபா தண்டப்பணம் அல்லது கடூழியத்துடன் அல்லது கடூழியமற்ற ஒரு மாத கால சிறைத்தண்டனை அல்லது அவையிரண்டும் விதிக்கப்படலாம்.*

★ இங்கு ‘அறிவித்தல்கொடுக்கப்பட்ட அலுவலகம்’ என்பது சொல்லப்பட்ட அலுவலகத்தை நிறுவ முன்னர் அது அமைந்துள்ள பிரதேசத்தின் பொலிஸுக்கும் குறித்த மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கும் அறிவித்தல்கொடுத்து நிறுவப்பட்ட அலுவலகமாகும்.

**கொடியேற்றலும் புகைப்படம் எடுத்தலும் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தலும்** (பிரிவு 74)

நியமன காலப்பகுதியில் முதல் தினத்தில் தொடங்கி தேர்தல் நடைபெறும் தினத்திற்கு மறுதினம் வரையில்,

1 - வேட்பாளர் பவனிவரும் வாகனத்தில் தவிர, வேறெந்த பொது அல்லது தனிப்பட்ட இடத்திலும் கொடி/பதாகைகளை இடுவது தடை செய்யப்பட்டதாகும்.

2 - வேட்பாளருக்கு ஆதரவுதேடும் கூட்டமொன்றை நடாத்தும்போது அத்தினத்திலும் அவ்விடத்தில் மட்டும் துண்டுப்பிரசுரங்கள், புகைப்படங்கள், குறியீடுகள், இலக்கங்களைக் காட்சிப்படுத்தலாம். அது தவிர, மக்கள் இருக்கின்ற வேறோர் இடத்தில் எவ்வித காட்சிப்படுத்தல்களையும் செய்ய முடியாது.

3 - பாதையொன்றின் மீது அல்லது குறுக்கே பிரசுரங்கள், சுவரொட்டிகள், கொடிகள், பதாகைகள், இலக்கங்கள், குறியீடுகள் முதலியவற்றைக் காட்சிப்படுத்துவது தடைசெய்யப்பட்டது.

4 - வேட்பாளர் பவனிவரும் வாகனம் தவிர்ந்த வேறு வாகனமொன்றின் (உள்ளே அல்லது வெளியே) பிரசுரங்கள், சுவரொட்டிகள், ஓவியங்கள், இலக்கங்களைக் காட்சிப்படுத்தல் தடைசெய்யப்பட்டதாகும்.

***தண்டனை*** *– தவறிழைக்கும் ஆளொருவருக்கு அல்லது அதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளும் ஆளொருவருக்கு நூறு ரூபா தண்டப்பணம் அல்லது கடூழியத்துடன் அல்லது கடூழியமற்ற ஒரு மாத கால சிறைத்தண்டனை அல்லது அவையிரண்டும் விதிக்கப்படலாம்.*

ஆளொருவர் மேற்போந்த செயல்களில் ஈடுபடுவாராயின், அதனைத் தடுப்பதற்கு அவசியமான, நியாயமான நடவடிக்கை எடுப்பதற்கும் அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கும் பொலிஸ் அலுவலர் ஒருவருக்கு

அதிகாரமுள்ளது. அதேபோல், அத்தகைய பொருள்களைப் பறிமுதல் செய்து கைப்பற்றி அப்புறப்படுத்துவதற்கும் அவருக்கு அதிகாரமுள்ளது.

மேற்சொன்ன தவறுகளை மேற்கொண்டிருக்கும்போது வேட்பாளர் ஒருவருக்கு, அரசியல் கட்சியொன்றின் செயலாளர் ஒருவருக்கு அல்லது சம்பந்தப்பட்ட பிறிதொரு தரப்பினருக்கு அது குறித்து நீதவான் நீதிமன்றமொன்றுக்கு அறிவித்து அவற்றை உடனடியாக அப்புறப்படுத்திக் கொள்வதற்கான உத்தரவொான்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

**வாக்களிக்கும்படி இரந்துகேட்பதற்கென வதிவிடங்களுக்குச் செல்லல்** (பிரிவு 75)

நியமன காலப்பகுதியின் முதல் நாளில் தொடங்கி தேர்தல் நடைபெறும் தினத்திற்கு மறுநாள் வரையில்,

1 - வாக்குகளை இரந்துகேட்பதற்கு

2 - யாதேனுமொரு கட்சிக்கு அல்லது குழுவுக்கு வாக்களிக்க வேண்டாமெனக் கோருவதற்கு

3 - வாக்களிப்பதிலிருந்து தவிர்ந்திருக்குமாறு கோருவதற்கு

4 - யாதேனும் பிரசார பிரசுரமொன்றை, இலக்கமொன்றை, குறியீடொன்றை, புகைப்படமொன்றைக் காட்சிப்படுத்துவதற்கு

வேட்பாளர் அல்லது அவரது குடும்ப உறுப்பினர் ஒருவரினால் வதிவிடங்களுக்குச் செல்வது தடைசெய்யப்பட்டதாகும்.

**தண்டனை -** தவறிழைக்கும் ஆளொருவருக்கு அல்லது அதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளும் ஆளொருவருக்கு நூறு ரூபா தண்டப்பணம் அல்லது கடூழியத்துடன் அல்லது கடூழியமற்ற ஒரு மாத கால சிறைத்தண்டனை அல்லது அவையிரண்டும் விதிக்கப்படலாம்.

**பிரசாவுரிமையை இழந்துள்ளவர்கள்** (பிரிவு 76)

பிரசாவுரிமையை இழந்த ஆளொருவருக்கு எந்தவொரு வேட்பாளா் சாா்பாக வாக்குகளை இரந்துகேட்டல், முகவரொருவராகச் செயற்படல், அவா் சாா்பாக பேசுதல் அல்லது அவ்வாறான வேறு ஏதேனுமொன்றைப் புரிய முடியாது. அதேபோல், பிரசாவுரிமையை இழந்துவிட்டதை அறிந்துகொண்டே அவ்வாறான ஆளொருவா் தமது பிரசாரத்துக்குப் பயன்படுத்திக்கொள்ளப்படும் வேட்பாளா் ஒருவரும் தவறிழைத்தவா் ஆகின்றாா்.

**தோ்தல் இரகசியங்களைப் பேணுதல்** (பிரிவு 77)

வாக்குச்சாவடியிலும் வாக்கெண்ணும் இடத்திலுமிருக்கும் அதிகாரம் பெற்ற ஆள்கள் (வேட்பாளா்கள், முகவா்கள், எழுதுநா்கள், நிலையப் பொறுப்பு அலுவலா்கள், தெரிவத்தாட்சி அலுவலா்கள் முதலிய) முதலாவது அட்டவணையில் ‘ஔ’ என்னும் படிவத்தின்படி நியதிச்சட்ட இரகசிய வெளிப்படுத்தலொன்றைச் செய்ய வேண்டும். அதன்படி, குறித்த ஆள்கள் அனைவரும் வாக்களிப்பு குறித்த இரகசியத்தன்மையைப் பேண வேண்டும் என்பதுடன், சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படாத எந்தவொரு வெளிப்படுத்தலையும் ஆளெவருக்கும் செய்தலாகாது.

★ தேருநா் இடாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பெயா்கள், இலக்கங்கள், உத்தியோகபூா்வ குறியீடுகளை வெளிப்படுத்தல் ஆகாது.

★ ஆளெவரேனும் வாக்களிக்கச்செல்லும் கட்சி அல்லது குழு எதுவென்பதை அறிந்துகொள்ள முயற்சித்தல் அல்லது அறிந்து கொள்ளுமிடத்து அதனை வெளிப்படுத்துதல் ஒரு தவறாகும்.

★ வாக்குச்சீட்டின் மறுபுறத்திலுள்ள இலக்கத்தை அறிந்துகொள்ள முயற்சித்தல் அல்லது அறிந்துகொள்ளுமிடத்து அதனை ஆளெவருக் கேனும் வெளிப்படுத்துவது ஒரு தவறாகும்.

★ வாக்கெண்ணுமிடத்து வாக்குச்சீட்டின் மறுபுறத்திலுள்ள இலக்கத்தை அறிந்துகொள்ள முயற்சித்தலும் அதன்மூலம் அறிந்து கொண்ட தகவல்களை ஏனையோருக்கு வெளிப்படுத்துவதும் ஒரு தவறாகும்.

★ வாக்குச்சீட்டொன்று கிடைத்தது முதல் வாக்குச்சீட்டுப் பெட்டியில் அதனை நுழைத்துவிட முன்னர் வாக்காளருடன் கதைப்பது ஒரு தவறாகும்.

★ (தலைமைதாங்கும் அலுவலர் அல்லது அவரது அதிகாரம்பெற்ற முகவரொருவரின் சட்டபூர்வ செயற்பாடும் இதனுடன் ஏற்புடைத்தாகா)

**தண்டனை** – ஐந்நூறு ரூபா தண்டப்பணம் அல்லது கடூழியத்துடன் அல்லது கடூழியமற்ற ஆறு மாத கால சிறைத்தண்டனையுடன் தவறாளியாகக் காணப்படும் தினத்திலிருந்து ஏழாண்டுகள் கழியும் வரை தேருநர் ஒருவராகப் பதிவுசெய்வதற்கோ அல்லது வாக்களிப்பதற்கோ தடை விதிக்கப்படலாம்.

## ஊழல் பழக்கங்கள்

**ஆள்மாறாட்டம்** (பிரிவு 78)

1 - தனது பெயரில் ஒரு தடவைக்கு மேல் வாக்களித்தல்.

2 - உயிருடனிருக்கும் அல்லது இறப்பெய்தியிருக்கும் வேறு ஆளொருவர் சார்பாக தனிப்பட்டமுறையில் அல்லது அஞ்சல்மூலம் வாக்களித்தல்.

மேற்சொன்ன விடயங்களுக்காக நேரடியாக அல்லது அஞ்சல் வாக்குச்சீட்டொன்றுக்கு விண்ணப்பித்தல்/அஞ்சல் வாக்குச்சீட்டொன்றில் செல்லுபடியான அல்லது செல்லுபடியற்றவாறு குறியீடு செய்தனுப்பல் ஆகிய விடயங்களும் கள்ளவாக்குப் போட்டவர்களாகக் கருதப்படக்

காரணமாக அமையலாம். இச்செயலுக்கு உதவியும் உடந்தையும் அளிக்கும் ஆளெவரும் ஊழல் பழக்க தவறுக்கு குற்றவாளியாகின்றார்.

***தண்டனை*** – *ஓராண்டு கால கடூழிய சிறைத்தண்டனை.*

**உபசாரம்செய்தல்** (பிரிவு 79)

தேர்தலுக்கு முன்னர், தேர்தல் நடைபெறும் தினம் அல்லது தேர்தலுக்குப் பின்னர் தாமாகவோ அல்லது பிறிதொருவர் மூலமாகவோ

1 - வாக்களித்தல் அல்லது வாக்களிக்காதிருத்தல்

2 - வாக்களித்திருத்தல் அல்லது வாக்களிக்காமை, வாக்களிக்கத் தயாராக இருத்தல்

ஆகிய விடயங்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தேருநர் எவருக்கும் நன்மைகளைப் பெற்றுக்கொடுக்கும் அல்லது பெற்றுக்கொடுக்க வாக்குறுதியளிக்கும் ஆளெவரும் உபசாரம்செய்யும் தவறுக்காக குற்றவாளியாகின்றார்.

***தண்டனை*** – *ஐந்நூறு ரூபா தண்டப்பணம் அல்லது கடூழிய அல்லது கடூழியமற்ற ஆறு மாத கால சிறைத்தண்டனை அல்லது அவையிரண்டும்.*

**தகாத செல்வாக்கு** (பிரிவு 80)

வாக்கை அளிக்க, வாக்கை அளிக்காமலிருக்க அவ்வாறன்றேல் தேருநர் ஒருவரின் வாக்குரிமையை சுதந்திரமாகப் பிரயோகிக்க இடையூறு விளைவிக்கின்றவாறான எந்தவொரு தூண்டுதல், வற்புறுத்தல், அழுத்தம்கொடுத்தல், பயமுறுத்தல், கடத்திச்செல்லல், அச்சுறுத்தல் விடுத்தல், மோசடிச் செயல், ஆன்மீக அல்லது லோகாயத சேதமொன்றையோ நட்டமொன்றையோ விளைவிக்கின்ற அல்லது அவ்வாறு விளைவிக்கப்போவதாக அச்சுறுத்துகின்ற ஆளெவரும் தகாத செல்வாக்கு என்ற தவறுக்கு குற்றவாளியாகின்றார்.

நியமன காலப்பகுதியின் முதலாம் நாளன்று தொடங்கி தேர்தல் வாக்கெடுப்புத் திகதியை அடுத்துவரும் நாளன்று முடிவடையும் காலப்பகுதியில் அதனுடன் தொடர்பான பின்வரும் விடயங்கள் தடைசெய்யப்பட்டவையாகும்:

1 - சமயக் கூட்டமொன்றில் தேர்தல் முடிவில் மாற்றம் உண்டுபண்ணும்படியான செல்வாக்கைப் பிரயோகிக்க அல்லது அரசியல் கட்சியொன்றுக்கு/குழுவென்றுக்கு வாக்களிக்கும்படி அல்லது வாக்களிக்காதிருக்கும்படி தூண்டுவதற்கு எவையேனும் சொற்களை உரைத்தல்.

2 - சமயக் கூட்டமொன்றில் மேற்சொன்ன கருமத்திற்காக பிரசுரங்கள், வேட்பாளர் ஒருவரின் புகைப்படம், சின்னம் முதலியவற்றை விநியோகித்தல் அல்லது காட்சிப்படுத்தல்.

3 - மத வழிபாட்டுத்தலமொன்றில் தேர்தல் இயக்கத்துக்கு ஆதரவு திரட்டும் நோக்கத்திற்காக பொதுக் கூட்டமொன்றை நடாத்துதல்.

4 - சமய பணித்துறை அமைப்பொன்றின் அங்கத்தவர் ஒருவரால்/ அலுவலர் ஒருவரால் சொல்லப்பட்ட சமயத்தைச் சார்ந்த தேருநர் எவரேனும் வாக்கை அளித்த அல்லது அளிக்காதிருந்த விதத்தின் பேரில், தேர்தலின்போது உதவியாகவும் உடந்தையாகவும் இருந்ததன் பேரில், அவ்வாறன்றேல் அவ்வாறான ஒரு கருமத்திற்குத் தூண்டுவதற்காக -

★ சொல்லப்பட்ட பற்றாளருக்கு அல்லது அத்தகைய உறுப்பினருக்கு வழங்கப்படும் யாதேனுமொரு சமய சேவை அல்லது நலனுதவியை அளிப்பதை மறுத்தல் அல்லது அவ்வாறு செய்வதாக அச்சுறுத்துதல்.

★ சொல்லப்பட்ட பற்றாளரை அத்தகைய சமய பணித்துறை அமைப்பிலிருந்து வெளியேற்றுவதாக அச்சுறுத்துதல்.

5 - தொழில்தருநர் எவராலும் குறித்த தொழிலில் ஈடுபடும் தேருநர் எவரேனும் வாக்களித்த அல்லது அவ்வாறு வாக்களிக்காதிருந்த விதத்தின் பேரில், தேர்தலில் உதவியும் உடந்தையும் அளித்த

விதத்தின் பேரில், அவ்வாறன்றேல் அவ்வாறான ஒரு கருமத்திற்குத் தூண்டுவதற்காக

★ தொழிலிலிருந்து விலக்குதல் அல்லது அவ்வாறு தொழிலிலிருந்து விலக்குவதாக அச்சுறுத்துதல்.

★ அதுவரை துய்த்துவந்து எதிர்காலத்தில் உரித்தாவதற்கிருந்த நலனுதவிகளை வழங்காதிருத்தல் அல்லது வழங்காதிருக்கப்போவதாக அச்சுறுத்துதல்.

***தண்டனை*** *– ஐந்நூறு ரூபா தண்டப்பணம் அல்லது கடூழிய அல்லது கடூழியமற்ற ஆறு மாத கால சிறைத்தண்டனை அல்லது அவையிரண்டும்.*

**இலஞ்சம்** (பிரிவு 81)

1 - எதிர்காலத்தில் வாக்களிப்பதற்கு, வாக்களிக்காமலிருப்பதற்கு, அவ்வாறன்றேல் ஏற்கனவே வக்களித்தமை அல்லது வாக்களிக்கா-திருந்தமை சார்பாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தாமாகவோ அல்லது பிறிதொருவர் மூலமாகவோ -

யாதேனும் ஒரு தொகைப் பணம்/கடன்/பதவி/ உயர்பதவி/ அன்பளிப்பு/ தொழில்/இணக்கப்பாடு அல்லது யோசனையொன்றை வழங்குதல், வழங்குவதாக வாக்குறுதியளித்தல் அல்லது வழங்க எத்தனித்தல் ஆகியன ஊழல் பழக்கங்களாகும்.

அதேபோல், மேற்சொன்ன நோக்கங்களுக்காக தேருநர் ஒருவரால் அவ்வாறான நலனுதவிகளைப் பெற்றுக்கொள்ளல் அல்லது கோருதல் இலஞ்சம்பெற்ற தவறாகின்றது.

2 - நியமனம் கிடைப்பதற்கு, வேட்பாளரொருவராவதிலிருந்து தவிர்ந்திருப்பதற்கு, வேட்பாளரொவராக இருப்பின் கேட்டுவிலகுவதற்கு

நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அல்லது பிறிதொருவர் மூலமாகவோ,

யாதேனும் ஒரு தொகைப் பணம்/கடன்/பதவி/உயர்பதவி/ அன்பளிப்பு/ தொழில்/இணக்கப்பாடு அல்லது யோசனையொன்றை வழங்குதல், வழங்குவதாக வாக்குறுதியளித்தல் அல்லது வழங்க எத்தனித்தல் ஆகியவற்றைப் புரியும் ஆளெவரும் ஊழல் பழக்கம் என்ற தவறுக்கு குற்றவாளியாகின்றார்.

***தண்டனை*** *– ஐந்நூறு ரூபா தண்டப்பணம் அல்லது கடூழிய அல்லது கடூழியமற்ற ஆறு மாத கால சிறைத்தண்டனை அல்லது அவையிரண்டும் விதிக்கப்படலாம்.*

## பிற ஊழல் பழக்கங்கள்

★ எவரேனும் வேட்பாளர் ஒருவரின் குணம் அல்லது நடத்தை பற்றி தேர்தலுக்கு முன்னர் அல்லது தேர்தல் நடைபெறுவதற்கிடையில் தேர்தல் முடிவுகள் மீது பாதிப்புச் செலுத்தக்கூடிய விதமாக பொய்யான கூற்றுக்களைத் தெரிவித்தல்.

★ தேர்தலுக்கு முன்னர் அல்லது தேர்தல் நடைபெறுவதற்கிடையில் தேர்தல் முடிவுகள் மீது பாதிப்புச் செலுத்தக்கூடிய விதமாக வேட்பாளர் ஒருவர் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்த விலகிவிட்டதாக பொய் உரைத்தல்.

***தண்டனை*** *– ஐந்நூறு ரூபா தண்டப்பணம் அல்லது கடூழிய அல்லது கடூழியமற்ற ஆறு மாத கால சிறைத்தண்டனை அல்லது அவையிரண்டும்.*

★ ஊழல் பழக்கங்களுக்காக (78/79/80/81) குற்றவாளியாகக் காணப்படும் ஆளொருவருக்கு ஐந்தாண்டு காலத்திற்கு தேர்தல்

உரிமைக்கு தடைவிதிக்கப்படுகிறது. குற்றவாளியாகக் காணப்படுமிடத்து உறுப்பினர் ஒருவராயின், அன்றைய தினத்திலிருந்து பதவியிலிருந்து அவர் வெளியேற்றப்படுவார்.

## சட்டமுரணான பழக்கங்கள்

**சட்டமுரணான போக்குவரத்து** (பிரிவு 84)

1 - வாக்குச்சாவடிக்கு அல்லது வாக்குச்சாவடியிலிருந்து தேருநர்களை வாகனங்கள் அல்லது போக்குவரத்து விலங்குகள் மூலம் போக்குவரவு செய்வதற்காக கொடுப்பனவுகளைச்செய்தலும் அதற்கான உடன்பாடொன்றை ஏற்படுத்திக்கொள்வதும் சட்டமுரணான பழக்கங்களாகும்.

2 - தேர்தல் நடைபெறும் தினம் மு.ப. 6.00 மணியில் தொடங்கி அன்றைய தினம் பி.ப. 5.00 மணி வரையான காலப்பகுதியில் தேருநர்களைப் போக்குவரத்துச்செய்வதற்கு வாகனங்கள், படகுகள் முதலியவற்றை வாடகைக்குக் பெறல், சேவையில் ஈடுபடுத்தல் அல்லது அதற்கு உதவியளித்தல் ஆகியன சட்டமுரணான பழக்கங்களாகும்.

***தண்டனை*** *– சம்பந்தப்பட்ட வாகனத்தை/படகை (கலம்) அரசுடைமையாக்கல்.*

## போக்குவரத்து சட்டமுரணான பழக்கமொன்றாகக் கருதப்படாத சந்தர்ப்பங்கள்

★ சட்டரீதியான அல்லது உத்தியோகபூர்வ கருமமொன்றுக்காக சொல்லப்பட்ட போக்குவரத்தில் ஈடுபட வேண்டியதாக இருப்பின்.

★ தமது வசிப்பிடத்திலிருந்து வாக்குச்சாவடிக்குச் செல்வதற்கு ஓர் ஆறு அல்லது கடலைக் கடந்துசெல்வது கட்டாயமானதாக அமையுமெனில்.

★ உடலியற் பலவீனம் காரணமாக கால்நடையாகச்செல்வதற்கு அல்லது பொதுப் போக்குவரத்துச் சேவையொன்றின்மூலம் வாக்குச் சாவடிக்குச் செல்வதற்கு முடியாதிருக்கும் ஆளெவரேனும் இருப்பின்.

(இங்கு அவர் சார்பாக பிறிதொருவர் தேர்தலில் வாக்களிக்க ஏழு நாட்களுக்கு முன்னரே சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு எழுத்திலான கோரிக்கையொன்றை முன்வைத்து எழுத்திலான அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.)

யாதேனும் பொலிஸ் அலுவலர் ஒருவருக்கு தாமாகவே அல்லது பிறிதொருவர் வழங்கிய முறைப்பாட்டின் பேரில் விசாரணையின் பின் சட்டவிரோத போக்குவரத்துக்காக ஈடுபடுத்திக்கொள்ளப்படும் வாகனங்களை அல்லது கலங்களைத் தடைசெய்வதற்காக தேர்தல் முடிவடையும்வரை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்திருக்கும் அதிகாரமுள்ளது.

**காட்சிப்படுத்தலுக்காக சட்டமுரணான கொடுப்பனவுகளைச் செய்தல்** (உறுப்புரை 84)

யாதேனுமோர் பிரசுரத்தையோ, அறிவித்தலையோ காட்சிப்படுத்துவ-தற்காக அல்லது அதற்காகப் பயன்படுத்திக்கொள்ளும் ஒரு வீடு/ ஒரு காணி/ ஒரு கட்டடத்திற்காக கொடுப்பனவொன்றைச் செய்வதும் சட்டமுரணான பழக்கங்களாகும்.

★ மேற்சொன்ன சந்தர்ப்பங்களில் வேண்டுமென்றே அவ்வாறான ஒரு கொடுப்பனவைச் செய்பவர் போன்றே, கொடுப்பனவைப் பெறுபவரும் குற்றவாளியாக் காணப்படுவார்.

எனினும், அறிவித்தல்கள், காட்சிப்படுத்தல்களை தனது வாழ்க்கைத்தொழிலாகக் கொண்ட ஆளொருவருக்கு செலுத்தப்படும் ஒரு கொடுப்பனவு சட்டவிரோதமானதாகா. ஆயினும், சொல்லப்பட்ட

கொடுக்கல்வாங்கல் பொதுவான ஒரு வியாபார நடவடிக்கையாக இருக்க வேண்டும்.

**செய்தித்தாள்களிலுள்ள உண்மைக்குப் புறம்பான அறிக்கைகள்** (பிரிவு 85)

1 - அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் அல்லது சுயேச்சைக் குழுவொன்றின் நடவடிக்கைகள் குறித்து அல்லது அபேட்சகர் ஒருவரின் உரைகளும் நடவடிக்கைகளும் குறித்து உண்மைக்குப் புறம்பான வெளிப்படுத்தல்களைச்செய்யும் ஒரு செய்தித்தாள்/சஞ்சிகை/பிரசுரத்தின் ஆசிரியர், உரிமையாளர், பதிப்பாசிரியர், வெளியீட்டாளர் அல்லது வேறு அத்தகைய அலுவலர் சட்டமுரணான செயலொன்றைப் புரிந்த தவறுக்கு குற்றவாளியாகின்றார்.

**சட்டமுரணான முறையில் தொழிலுக்கு அமர்த்துகை** (பிரிவு 86)

வாக்குச்சாவடி முகவர்கள், வாக்கெண்ணும் முகவர்கள், எழுதுநர்கள் தவிர்ந்த வேறெந்தவோர் ஆளும் தேர்தலுக்கு உதவும் கருமத்திற்காக ஊதியத்திற்கு, கொடுப்பனவுக்கு அல்லது செலுத்தப்படுமென்ற வாக்குறுதியின் பேரில் தேர்தல் நடைபெற முன்னரும் தேர்தல் நடைபெறும் தினத்திலும் அல்லது தேர்தலுக்குப் பின்பும் தொழிலுக்கு அமர்த்துவது சட்டமுரணான ஒரு செயலாகும்.

**சட்டமுரணான வெளியீடுகளை அச்சிடுதல்** (பிரிவு 87)

அச்சீட்டாளரதும் வெளியீட்டாளரதும் பெயர், முகவரி முன்புறத்தில் குறிப்பிடப்படாத தேர்தல் தொடர்பான வெளியீடுகளை அச்சிடும், வெளியிடும், விநியோகிக்கும் அல்லது அவ்வாறு செய்வதற்கு முற்படும் வேட்பாளர் ஒருவர் அல்லது அவரது முகவர் ஒருவர் சட்டமுரணான செயலொன்றைப் புரிந்த தவறுக்காக குற்றவாளியாகின்றார்.

**மேற்சொன்ன சகலவிதமான சட்டமுரணான செயல்களுக்குமான தண்டனை** – முந்நூறு ரூபா தண்டப்பணத்துடன் மூன்றாண்டுகள் வாக்களிக்கும் வாய்ப்பும் இழக்கப்படும். தவற்றை மேற்கொள்ளும்போது

அவர் மாகாண சபை உறுப்பினர் ஒருவராயின் தவறாளியான திகதியிலிருந்து பதவியை விட்டு வெளியேற்றப்படுவார்.

**பிரிவு 66 முதல் 89 வரையானவற்றுக்கான மேலதிக தண்டனை -** தவறாளியாகக் காணப்படும் திகதியிலிருந்து ஐந்தாண்டு காலத்துக்கு மாகாண சபையொன்றுக்குத் தெரிவுசெய்யப்படுவதற்கான வாய்ப்பு இழக்கப்படும்.

# வாக்கெடுப்பு

**வாக்கெடுப்பு பற்றிய அறிவித்தல்** (பிரிவு 22)

தேர்தல் நடைபெறும் மாவட்டங்களை சிங்கள அகரவரிசைப்படியான அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள், வேட்பாளர்களுக்குரிய இலக்கங்கள், தேர்தல் நடைபெறும் திகதி, வாக்குச்சாவடி பற்றிய தகவல்கள் தெரிவத்தாட்சி அலுவலரினால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும்.

**வாக்கெடுப்பு நடைபெறும் திகதி** (பிரிவு 22)

அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து ஐந்து வாரங்களுக்குக் குறையாததும் எட்டு வாரங்களுக்கு மேற்படாததுமான சனிக்கிழமை அல்லது பிறிதொரு தினம் (நோன்மதி நாட்களும் அரசாங்க விடுமுறை தினங்களும் தவிர்ந்த) இதற்காக ஈடுபடுத்திக்கொள்ளப்படும். அன்றைய தினம் மு.ப. 7.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை வாக்கெடுப்பு இடம்பெறும். அத்தினத்தில் யாதேனுமொரு அவசர நிலைமையின் பேரில் வாக்கெடுப்பை நடாத்த முடியாத சூழ்நிலை இருக்குமாயின், அதற்காக வேறொரு தினம் வர்த்தமானியில் அறிவிக்கப்படுவதுடன், அத்தினம் குறித்த வர்த்தமானி அறிவித்தல் திகதியிலிருந்து பதின்நான்கு நாட்களுக்குள்ளாக இருத்தல் வேண்டும்.

**வாக்குச்சாவடி** (பிரிவு 22)

விசேடமான சந்தர்ப்பங்களில் தவிர சகல வாக்குச்சாவடிகளும் வாக்கெடுப்புப் பிரிவில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். சொல்லப்பட்ட பிரிவில் வசிக்கும் வாக்காளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை மிகவும் குறைத்துக்கொள்ளக்கூடிய விதத்தில் அந்த அமைவிடம் இருக்க வேண்டும்.

வாக்குச்சாவடியில் இருக்கக்கூடிய ஆள்கள்:

1 வாக்களிக்க வருகைதந்துள்ள வாக்காளர்கள்.

2 வாக்குச்சாவடியில் கடமைகளில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள்/ ஊழியர்கள்.

3 கடமையில் ஈடுபட்டுள்ள பொலிஸ் அலுவலர்கள்.

4 அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் /வேட்பாளர்கள்.

★ ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு வேட்பாளரை விடக் கூடுதலானவர்கள் வாக்குச்சாவடியில் இருப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

**அஞ்சல் மூல வாக்கெடுப்பு** (பிரிவு 24)

தனிப்பட்ட ரீதியில் தமக்குரிய வாக்குச்சாவடியில் வாக்களிக்க வாய்ப்பின்றி இருக்கின்ற ஆள்களுக்கு அதற்காக வாய்ப்புள்ளது. அதற்காக அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பமொன்று நியமனப்பத்திர அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்களுக்குள்ளாக சமர்ப்பித்தல் வேண்டும். அக்கோரிக்கை குறித்து ஆராய்ந்து தெரிவத்தாட்சி அலுவலர் அவரது முடிவை சம்பந்தப்பட்ட விண்ணப்பகாரருக்கு எழுத்துமூலம் அறிவிப்பார். அம்முடிவு இறுதியானதாகும். அதன்காரணமாக அதனை எதிர்த்து மேன்முறையீடு செய்ய முடியாது.

அவ்வாறாக தெரிவத்தாட்சி அலுவலரினால் அஞ்சல் மூல தேருநர்களின் பெயர்ப்பட்டியலொன்றைத் தயாரித்து இவ்வலுவலகத்தில் காட்சிப்படுத்தல் வேண்டும்.

அஞ்சல்மூல வாக்கு உரித்தான ஆள்களுக்கு தனிப்பட்ட முறையில் வாக்குச்சாவடிக்குச் சென்று வாக்களிக்க முடியாது. அவ்வேற்பாட்டை மீறுகின்ற தபால்மூல தேருநர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு ஐந்நூறு ரூபாவும், ஓராண்டு காலத்திற்கு கடூழிய அல்லது கடூழியமின்றிய சிறைத்தண்டனையோ அல்லது அவையிரண்டும் விதிக்கப்படலாம்.

**அஞ்சல்மூலம் வாக்களிக்க விண்ணப்பிக்கக்கூடிய ஆள்கள்** (பிரிவு 24)

1 தொழிலின் தன்மையும் விசேடமான சந்தர்ப்ப சூழ்நிலைகளும் காரணமாக இலங்கைத் தரைப்படை, இலங்கை வான்படை, இலங்கை கடற்படை அங்கத்தவர்கள்/பொலிஸ் அலுவலர்கள்/ புகையிரம் தபால், தொலைத்தொடர்புத் திணைக்கள அலுவலர்கள் புகையிரதம், அஞ்சல், தொலைத்தொடர்புத் திணைக்கள அலுவலர்கள்/மத்திய அல்லது பிராந்திய போக்குவரத்துச் சபைகளின் அங்கத்தவர்கள்.

2. தேர்தல் கடமைகளில் ஈடுபட்டிருத்தல் அல்லது ஈடுபடுவதற்கு வாய்ப்புவளமிருப்பதன் காரணமாக அரசாங்க சேவையில், மக்கள் வங்கியில் அல்லது உள்ளூராட்சி சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள்.

3. வசிக்கும் மாவட்டம் அல்லாத மாவட்டமொன்றிலிருந்து தேர்தலில் தோன்றும் வேட்பாளர்கள்.

**அஞ்சல்மூல வாக்காளர்களுக்கு அனுப்பப்படும் ஆவணங்கள்** (பிரிவு 24)

1. வாக்குச்சீட்டையும் அதனை குறியீடுசெய்து அனுப்புவதற்காக வாக்குச்சீட்டு இலக்கத்துடனான கடித உறையும்.
2. ஆளடையாள வெளிப்படுத்துகையின் மாதிரியமைப்பு
3. மேலே 1 மற்றும் 2 இலுள்ள ஆவணங்களை இட்டு அனுப்புவதற்கான பெரிய கடிதவுறையொன்று.

**உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை (Poll Card)** (பிரிவு 25)

தெரிவத்தாட்சி அலுவலர் தேருநர் ஒவ்வொருவருக்கும் (தபால்மூல தேருநர்கள் தவிர) உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையொன்றை அனுப்பிவைத்தல் வேண்டும்.

அவ்வட்டையில்,

1 தேருநரின் பெயர்/ முகவரி/ பதிவு இலக்கம்

2 நிருவாக மாவட்டம்/ வாக்கெடுப்பு மாவட்டம்/ வாக்கெடுப்புப் பிரிவு/ உரிய வாக்குச்சாவடி

3 வாக்கெடுப்பு நடைபெறும் திகதி, நேரம் என்பன

குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

இந்த உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை குறைந்தபட்சம் தேர்தல் நடைபெறும் தினத்திற்கு ஏழு நாட்களுக்கு முன்னர் சாதாரண அஞ்சல்மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு வழங்க அஞ்சல் அலுவலகத்திற்கு முடியாமல் செல்லும் பத்திரங்களை தேருர் கோரும்போது வழங்குவதற்காக தேர்தல் நடைபெறும் தினத்தில் பி.ப. 4.00 மணி வரையில் அஞ்சல் அலுவலகத்திலேயே வைத்திருக்க வேண்டும். தமது பெயர் தேருநர் இடாப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தவிடத்தும், உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை கிடைக்காதவிடத்து, தேருநர் ஒருவரால் ஆற்றக்கூடிய முதல் கருமம் யாதெனில், அஞ்சல் அலுவலகத்தில் அது உள்ளத என்பதைப் பரிசோதித்துப் பார்ப்பதே.

அதிகாரமின்றி உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை வேறெந்த ஆளிடமும் கையளித்தல், விற்பனைசெய்தல் அல்லது விற்பனைசெய்வதற்கு முயற்சித்தல், கொள்வனவுசெய்தல் அல்லது கொள்வனவுசெய்வதற்கு முயற்சித்தல் என்பன தண்டப்பணத்துடன் கடூழிய அல்லது கடூழியமற்ற ஆறு மாத கால சிறைத்தண்டனை விதிக்கப்படக்கூடிய ஒரு குற்றமாகும்.

வேறொருவரின் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையொன்றை தன்வசம் வைத்திருப்பதும் ஒரு குற்றமாக இருப்பதுடன், அதற்கு கடூழிய அல்லது கடூழியமற்ற ஆறு மாத கால சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.

**வாக்குச்சீட்டு - ballot paper** (பிரிவு 30)

1 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பெயர்களை சிங்கள அகரவரிசை ஒழுங்கின்படி தயாரித்து அந்த அ. 1 இன் எதிரில் அந்தந்த கட்சிகளுக்குரிய சின்னங்களும் மும்மொழிகளிலும் காண்பிக்கப்படல் வேண்டும்.

2 அதனையடுத்து ஒவ்வொரு சுயேச்சைக் குழுவும் அவற்றுக்குரிய இலக்கங்களும் தேர்தல் சின்னங்கள் இருப்பின், அவையும் மும்மொழிகளிலும் கிரம ஒழுங்கின்படி காண்பிக்கப்படல் வேண்டும்.

* வாக்கை குறியீடுசெய்ய அதற்கு எதிரே இடவசதி விடப்பட்டிருக்க வேண்டும்.

3 தொடர் இலக்கங்களாக அச்சிடப்பட்டிருக்க வேண்டும்.

4 சகல வாக்குச்சீட்டுப் பத்திரங்களின் பின்புறத்திலும் உப பத்திரத்திலும் ஒரே மாகாண சபைக்குத் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையுடன் மேலும் மூன்றைக் கூட்டவரும் தொகை தொடர் இலக்கங்களாக அச்சிடப்பட்டிருக்க வேண்டும்.

5 வாக்குச்சீட்டுக்கள் மடிக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

**வாக்கெடுப்பு நிலையங்களின் வசதிகள்** (பிரிவுகள் 27/28)

சம்பந்தப்பட்ட தெரிவத்தாட்சி அலுவலரினால்,

1 சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர், மேலதிக தலைமைதாங்கும் அலுவலர்கள், அவசியமான அளவு எழுதுநர்கள், ஏனைய பணியாள்தொகுதியினர்.

2 வாக்களிப்பதற்காக இரகசியத்தன்மையை நன்கு பேணக்கூடிய சுற்றிமறைக்கப்பட்ட ஓரிடம்.

3 தேருநர் இடாப்புப் பிரதிகள்/அஞ்சல்மூல தேருநர் இடாப்பு.

4 நியாயமானளவு வாக்குச்சீட்டுப் பெட்டிகள்/வாக்குச்சீட்டுக்கள்/ வாக்குகளைப் பதிவுசெய்வதற்கு அவசியமான பென்சில்கள் முதலியன.

5 வாக்காளர்களுக்கு வழிகாட்டுவதற்காக 3 படிவங்களின்படி தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தல் அடங்கிய அறிவித்தல்கள்.

6 தேர்தலில் தோன்றும் கட்சிகள்/சுயேச்சைக் குழுக்களும் அவற்றுக்கு உரித்தான உத்தியோகபூர்வ சின்னங்கள், வேட்பாளர்களின் பெயர்கள், இலக்கங்கள் குறிப்பிடப்பட்ட அறிவித்தல்கள்.

(இவ்வனைத்து அறிவித்தல்களும் மும்மொழிகளிலும் இருக்க வேண்டும்)

**வாக்கெடுப்பு முகவர்கள்** (பிரிவு 32)

தேர்தல் உரிய முறையில் நடைபெறுகின்றதா என்பதைக் கண்காணிக்க வாக்கெடுப்பு முகவர்கள் நியமிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு கட்சியின் செயலாளர், அவரது அதிகாரம்பெற்ற முகவர் அல்லது சுயேச்சை அணித் தலைவரால் இந்நியமனம் மேற்கொள்ளப்படுகிறது.

அத்தகைய சகல நியமனங்களும் எழுத்துமூலம் இடம்பெற வேண்டும் என்பதுடன், அதில் நியமிக்கப்பட்டவரின் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பன குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். அவ்வாவணம் தேர்தல் நடைபெறும் திகதிக்கு முன்னர் அல்லது தேர்தல் தினத்தில் தலைமை தாங்கும் அலுவலருக்கு வழங்கப்படலாம். அதற்கு முன்னர் அவ்வாவணத்தில் கட்சியொன்றாயின் செயலாளர் அல்லது அவரது அதிகாரம்பெற்ற முகவரும், அணியொன்றாயின் அதன் தலைவரும் ஒப்பமிட்டிருக்க வேண்டும்.

எனினும், அவர்களால் அதிகாரமளிக்கப்பட்ட வேட்பாளர்களுக்கும் இந்நியமனத்தைச் செய்யலாம். அது தெரிவத்தாட்சி அலுவலருக்கு எழுத்துமூலம் வழங்கப்பட வேண்டும். எனினும், அவ்வதிகார ஒப்படைப்பு ஒரு தேர்தல் பிரிவுக்கு ஒரு வேட்பாளருடன் வரையறுக்கப்படல் வேண்டும்.

நியமிக்கப்பட்ட முகவர் ஒருவரை இரத்துச்செய்துவிட்டு அவர் சார்பாக மற்றுமொரு முகவர் நியமிக்கப்படுவாராயின், முன்னர் போலவே அவர் பற்றிய சகல தகவல்களையும் தலைமைதாங்கும் அலுவலருக்கு எழுத்துமூலம் அறிவிக்க வேண்டும்.

ஒரு கட்சியிலிருந்து அல்லது சுயேச்சைக் குழுவிலிருந்து ஒரு வாக்கெடுப்பு நிலையத்தில் தங்கியிருக்கக்கூடிய உயர்ந்தபட்ச முகவர்களின் எண்ணிக்கை 2 மட்டுமே.

**வாக்கெடுப்பை நடாத்துவதற்கான பொதுவான முறைகள்** (பிரிவு 33)

1 வாக்களிப்பதற்கு உரிய வாக்கெடுப்பு நிலையத்திற்கு தவிர வேறு வாக்கெடுப்பு நிலையமொன்றிற்கு தேருநர் அனுமதிக்கப்படல் ஆகாது.

2 வாக்கெடுப்பு நிலையத்தில் சிறப்பாக ஒழுங்கைப் பேணுவதற்கும் வாக்கெடுப்பு நிலையத்தில் தங்கியிருக்க உரிமையுள்ளவர்கள் தவிர்ந்த அனைவரையும் அதிலிருந்து வெளியேற்றவும் தலைமைதாங்கும் அலுவலர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3 வாக்கெடுப்பு நிலையத்தில் முறைகேடான விதத்தில் நடந்துகொள்ளும் அல்லது தலைமைதாங்கும் அலுவலரின் பணிப்புரைகளைப் புறக்கணிக்கும் ஆள்களை பொலிஸார் மூலம்

அல்லது தம்மால் அதிகாரமளிக்கப்படும் வேறொருவா் மூலம் உடனடியாக அகற்றும் அதிகாரம் அவருக்குள்ளது.

★ அவ்வாறு அகற்றப்பட்ட ஆளொருவருக்கு தலைமைதாங்கும் அலுவலா் அனுமதியளித்தாலொழிய வாக்கெடுப்பு முடிவடையும் வரை வாக்கெடுப்பு நிலையத்தில் உட்பிரவேசித்தல் ஆகாது.

அதேபோல், அவா் தவறொன்றுக்கு சாா்த்தப்பட்டவராக இருப்பின், நீதவான் ஒருவரின் முன்னிலையில் ஆஜா்படுத்தப்படும்வரை கைதுசெய்து வைக்கப்படலாம்.

எவ்வாறாயினும், மேற்சொன்னவாறு செயலாற்றும்போது அவரது வாக்குரிமை மீறப்படாதவாறு செயலாற்றுதல் வேண்டும்.

**வாக்கெடுப்பைத் தொடங்குதல்** (பிரிவுகள் 34/35)

தோ்தல் நடைபெறும் தினம் மு.ப. 7.00 மணிக்கு முன் அன்றைய தினம் பயன்படுத்தப்படவுள்ள வாக்குச்சீட்டுக்கள், பதவிவழி இலச்சினை, உத்தியோகபூா்வ சின்னம், தேருநா் இடாப்புப் பிரதிகள் என்பன தலைமைதாங்கும் அலுவலரினால் வாக்கெடுப்பு நிலையத்திற்கு வருகை தந்துள்ள ஆள்களுக்கு காண்பிக்கப்படல் வேண்டும்.

ஒவ்வொரு வாக்குச்சீட்டுப் பெட்டியையும் அவா்கள் முன்னிலையில் திறந்து அது வெறுமையாக இருப்பதை உறுதிசெய்த பின் அதனைப் பூட்டி திறக்கமுடியாதவாறு இலச்சினையிடுதல் வேண்டும்.

வாக்குச்சீட்டுப் பெட்டியை வைக்கும்போது அதனைத் தனக்கு நன்கு தெரியும்படியான ஓரிடத்தில் வைக்க தலைமைதாங்கும் அலுவலா் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

வாக்கெடுப்பு ஆரம்பமாகும்போது ஒவ்வொரு வாக்காளருக்கும் ஒரு வாக்குச்சீட்டு வீதம் வழங்கப்படும்.

அதற்கு உடன் முன்னர்,

1 - தேருநர் இடாப்பில் காண்பிக்கப்பட்டுள்ளவாறு தேருநரின் பெயர்/ இலக்கம்/விவரணம் என்பன உரத்த குரலில் அழைக்கப்படுதல் வேண்டும்.

2 - தேருநரின் இலக்கத்தை அடியிதழ் தாளில் குறித்துக்கொண்டு வாக்குச்சீட்டை அதிலிருந்து பிரித்தெடுக்க வேண்டும்.

3 - வாக்குச்சீட்டில் பதவிவழி இலச்சினை பொறிக்கப்பட்டு/ பதிக்கப்பட்டு/துளையிடப்பட்டு இருத்தல் வேண்டும்.

4 - வாக்குச்சீட்டை வழங்கிய பின் அவர்களின் பெயருக்கு எதிரில் அவ்வாறு வழங்கியதை அடையாளங்காணக்கூடிய விதத்தில் ஒரு குறியீட்டை இட வேண்டும்.

5 - அதன்பின் தேருநர் தோதான குறியீடு ஒன்றினால் (துடைத்தழிக்க முடியாத மையினால் இடப்பட்ட ஒரு குறியீடு) பின்வருமாறு குறியிடப்படும்.

★ இங்கு இடது கையின் சிறுவிரல், சிறுவிரல் இல்லாவிடில் அதே கையின் வேறேதேனும் விரல்.

★ இடது கையின் எல்லா விரல்களும் இல்லாவிடின், வலது கையின் சிறுவிரல், அச்சிறுவிரலும் இல்லாவிடின், வலது கையின் வேறேதேனும் ஒரு விரல்.

★ இடது, வலது ஆகிய இரு கைகளிலும் விரல்கள் இல்லாத பட்சத்தில் அக்கைகளின் நுனி.

**வாக்குச்சீட்டுக்கள் வழங்கப்படாதவர்கள்** (பிரிவு 36)

1. வாக்களித்து முடித்தவரா என்பதை அடையாளம் காண்பதற்காக தோதான குறியீடு இருக்கின்றதா என்பதைப் பரிசோதிப்பதற்கு விட மறுக்கும் ஆளொருவர்.

2. பரிசோதிக்கும்போது தோதான குறியீடு ஏற்கனவே இருக்கின்றது என்பது அறியப்படும் ஆளொருவர்.

3. தோதான குறியீட்டின்மூலம் குறியீடுசெய்ய விட மறுக்கும் ஆளொருவர்.

ஆகியோருக்கு வாக்குச்சீட்டு எதுவும் ஒப்படைக்கப்பட மாட்டா.

அத்தகைய ஆளின் பெயர்/இலக்கத்தையும் வாக்குச்சீட்டொன்று ஒப்படைக்கப்படாமைக்கான காரணத்தையும் குறிப்பிட்டு முதலாவது அட்டவணையின் 'ஈ' என்னும் படிவத்தைத் தழுவிய ஆவணமொன்று தலைமைதாங்கும் அலுவலரினால் தயாரிக்கப்படல் வேண்டும்.

**வாக்களிக்கும் முறை** (பிரிவு 37)

வாக்காளர் முதலில் தனது ஆளடையாளத்தை உறுதிசெய்ய வேண்டும். அதற்காக அவர் வசம் செல்லுபடியான ஆளடையாள அட்டையொன்று இருக்க வேண்டும். அவை பின்வருமாறானவையாகும்:

1. தேசிய அடையாள அட்டை.
2. உதவித் தேர்தல்கள் ஆணையாளர் விநியோகித்த தற்காலிக அடையாள அட்டை.
3. வெளிநாட்டுக் கடவுச்சீட்டு.
4. சாரதி அனுமதிப்பத்திரம்.
5. ஓய்வூதியர் அடையாள அட்டை.

6. வண/மதகுரு அடையாள அட்டை.
7. புகையிரதத் திணைக்கள அடையாள அட்டை.

இந்த அடையாள அட்டைகளில் ஒன்றைக் காண்பித்து ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும்போது வாக்குச்சீட்டொன்று வழங்கப்படும்.

வாக்குச்சீட்டு கிடைத்தவுடன் வாக்கை குறியீடுசெய்வதற்காகத் தயார்செய்யப்பட்ட மறைப்பான இடத்திற்குச் செல்ல வேண்டும்.

வாக்கெடுப்பு நிலைய தலைமைதாங்கும் அலுவலர் யாதேனும் வாக்காளர் ஒருவர் தேவைக்கு மேல் நேரம் வாக்களிப்பதற்கு எடுத்துக்கொள்ளாதிருப்பதற்கு அவசியமான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

மற்றெவருக்கும் தென்படக்கூடிய விதத்தில் வாக்கை குறியீடுசெய்தல் ஆகாது.

முதலில் தான் வாக்களிக்க விரும்பும் அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் முன்னிலையில் இடம் ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில் புள்ளடி (X) குறியீட்டை இட வேண்டும்.

அதன்பின் தான் விருப்பு வாக்கை குறியீடுசெய்யக் கருதுவதாயின், தான் விரும்பும் மூன்று வேட்பாளர்களுக்கு அந்த ஒவ்வொரு வேட்பாளரின் இலக்கம் அடங்கிய கூண்டுகளின்மீது முன்போலவே புள்ளடி (X) குறியீட்டை இடலாம்.

அதன்பின் குறித்த வாக்குச்சீட்டில் குறியீடுசெய்த எவையும் தென்படாதவாறு அதனை மடித்து வாக்குச்சீட்டுப் பெட்டியினுள் இட வேண்டும்.

அதனையடுத்து, வாக்களித்த ஆள் தாமதிக்காமல் வாக்கெடுப்பு நிலையத்தை விட்டு வெளியேறிச் செல்ல வேண்டும்.

வாக்காளர் கவனக் குறைவால் வாக்குச்சீட்டொன்று பழுதாகிவிடின், அதனை மீண்டும் தலைமைதாங்கும் அலுவலரிடம் ஒப்படைக்கலாம். அத்தவறு குறித்து திருப்தியடைவாராயின், வேறு வாக்குச்சீட்டொன்றை அவருக்கு வழங்கும் அதிகாரம் தலைமைதாங்கும் அலுவலருக்கு உள்ளது.

வாக்காளர் ஒருவர் கோருமிடத்து வாக்களிக்கும் விதத்தை எடுத்துக்கூற வாக்கெடுப்பு நிலைய தலைமைதாங்கும் அலுவலருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரால் முடியும். எனினும், அந்நடவடிக்கை வாக்கெடுப்புநிலைய முகவர்களுக்குத் தென்படும்படியாக, கேட்கும்படியாக எந்தவொரு கட்சி அல்லது குழுவைத் தெரிவுசெய்ய வேண்டும் என்பது உணரப்படாத விதத்தில் மேற்கொள்ள வேண்டும்.

விழிப்புலனற்ற அல்லது வேறு உடலியல் உபாதைக்குள்ளான வாக்காளர் ஒருவர் சார்பாக அவரால் கோரப்படுமிடத்து, தலைமைதாங்கும் அலுவலர் தனது பணியாள்தொகுதி அங்கத்தவர் ஒருவரது முன்னிலையில் வாக்குச்சீட்டில் வாக்காளரின் அறிவுறுத்தலின்பேரில் குறியீடுசெய்ய முடியும்.

**பன்முறை வாக்களித்தல்** (பிரிவு 40)

1 ஒன்றுக்கதிகமான மாவட்டங்களில் வாக்களித்தல் அல்லது அதற்காக வாக்குச்சீட்டொன்றைக் கோருதல்.

2 அதே நிருவாக மாவட்டத்தில் ஒன்றுக்கதிகமான முறை வாக்களித்தல் அல்லது அதற்காக வாக்குச்சீட்டொன்றைக் கோருதல் சட்டமுரணான செயலாகும்.

**வாக்குச்சீட்டு கொடுக்கப்பட முன்னர் வெளிப்படுத்துகையொன்றைச் செய்தல்** (பிரிவு 41)

வாக்காளர் ஒருவரின் வாக்குரிமை குறித்த நிச்சயமற்றதன்மை காணப்படுமாயின், வாக்கெடுப்பு நிலைய தலைமைதாங்கும் அலுவலரின் தற்றுணிபின்பேரில் வாக்காளர் ஒருவருக்கு முதலாவது அட்டவணையில் 'உ', 'ஊ', 'எ' என்னும் படிவங்களில் குறிப்பிடப்படும் வெளிப்படுத்துகைகளில் ஒன்றையோ பலவற்றையோ செய்ய வேண்டுமெனத் தேவைப்படுத்தலாம்.

தனது பெயர் வாக்கெடுப்பு நிலையத்திலுள்ள பெயர்ப்பட்டியலிலுள்ள பெயர் என அவ்வாக்குச்சாவடியிலோ அல்லது வேறொரு இடத்திலோ ஏற்கனவே வாக்களித்து முடியவில்லையென வாக்களிப்பில் தகுதியீனத்துக்கு உள்ளாகவில்லை என்ற விடயங்கள் அத்தகைய வெளிப்படுத்துகைகளில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

அவ்வாறான வெளிப்படுத்துகையொன்றைச் செய்ய மறுக்கும் ஆளொருவருக்கு வாக்குச்சீட்டொன்றை வழங்காதிருக்கும் அதிகாரம் வாக்கெடுப்பு நிலைய தலைமைதாங்கும் அலுவலருக்கு உள்ளது.

***தண்டனை*** *– மேற்சொன்ன வெளிப்படுத்துகையைச் செய்யும்போது வேண்டுமென்றே யாதேனும் பொய்யுரைக்கும் குற்றவாளிக்கு ஐந்நூறு ரூபா தண்டப்பணம் அல்லது கடூழிய அல்லது கடூழியமற்ற ஆறு மாத கால சிறைத்தண்டனை அல்லது அவையிரண்டும் விதிக்கப்படலாம்.*

**பழுதுபட்ட வாக்குச்சீட்டுக்கள்** (பிரிவு 42)

வாக்குச்சீட்டொன்றாக ஏற்றமுறையில் பயன்படுத்தவியலாத அத்தகைய வகையில் தனது வாக்குச்சீட்டைத் தற்செயலாகக் கையாண்டு பழுதுபடுத்திய வாக்காளர் ஒருவர், அவ்வாறு தற்செயலாகக் கையாண்டு பழுதுபடுத்தப்பட்ட வாக்குச்சீட்டைத் தலைமைதாங்கும் அலுவலரிடம்

ஒப்படைத்து, தலைமைதாங்கும் அலுவலர் திருப்திப்படும்வகையில் அத்தகைய தற்செயல் நிகழ்வை எண்பிப்பதன்மேல், அவ்வாறு ஒப்படைத்தளிக்கப்பட்ட வாக்குச்சீட்டுக்குப் பதிலாக இன்னுமொரு வாக்குச்சீட்டைப் பெறலாம்.

**கேட்டுப்பெறும் வாக்குச்சீட்டுக்கள்** (பிரிவு 43)

வாக்கெடுப்பு நிலையத்திலுள்ள தேருநர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதும் ஏற்கனவே அவ்வாக்கு அளிக்கப்பட்டுள்ளவிடத்து சொல்லப்பட்ட பெயர் சார்பாக வாக்குச்சீட்டொன்றைக் கேட்டுப்பெறும் வாக்காளர் ஒருவர் சார்பாக வழங்கப்படுவது கேட்டுப்பெறும் வாக்குச்சீட்டாகும்.

அதனை வழங்க முன்னர் முதலாவது அட்டவணையில் 'ஏ' என்னும் படிவத்தின்படி தேருநர் இடாப்பில் குறிப்பிடப்படும் ஆள் தாமே என்பதற்கான வெளிப்படுத்துகையொன்றைச் செய்து அவ்வாளினால் அதில் ஒப்பமிடப்படல் வேண்டும்.

அப்படிவம் ஏனைய வாக்குச்சீட்டுக்களிலிருந்து வித்தியாசமான ஒரு நிறத்தில் அச்சிடப்பட்டிருக்கும்.

அத்தகைய கேட்டுப்பெறும் வாக்குச்சீட்டை வாக்குச்சீட்டுப் பெட்டியில் இடுவதற்கு முன்னர் அதன் பின்புறத்தில் வாக்காளரின் பெயரையும் இலக்கத்தையும் தலைமைதாங்கும் அலுவலர் குறித்துக்கொள்ள வேண்டும்.

**வாக்கெடுப்பை முடிவுறுத்தல்** (பிரிவுகள் 44/45)

வாக்கெடுப்பு இடம்பெறும் தினம் பி.ப. 4.00 மணிக்குப் பின்னர் ஆளெவருக்கும் வாக்குச்சீட்டு எதுவும் ஒப்படைக்கப்படல் ஆகாது. எனினும், அந்நேரமளவில் வாக்குச்சீட்டுக்கள் ஒப்படைக்கப்பட்டு

வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்காக காத்திருப்பவர்கள் அந்நேரத்தின் பின்னரும்கூட தமது வாக்கைப் பிரயோகிக்கலாம்.

வாக்கெடுப்பு முடிவடைந்த பின் தேவையின்றிய தாமதமின்றி வாக்கெடுப்புநிலைய தலைமைதாங்கும் அலுவலரால் வாக்கெடுப்பு முகவர்களின் முன்னிலையில்,

1 - வாக்குச்சீட்டுக்கள் புகுத்தப்படும் இடத்தில் இலச்சினையிடப்பட்ட வாக்குச்சீட்டுப் பெட்டிகள்

2 - ஒவ்வொரு வாக்குச்சீட்டுப் பெட்டியின் சாவி

3 - பாவிக்கப்படாத மற்றும் பழுதுபட்ட வாக்குச்சீட்டுக்கள்

4 - தேருநர் இடாப்பில் குறியீடுசெய்யப்பட்ட பிரதிகளும் அடியிதழ்களும்

5 - வாக்குச்சீட்டுக்கள் ஒப்படைக்கப்பாத வாக்காளர்களின் நிரல்

6 - கேட்டுப்பெறும் வாக்குச்சீட்டுக்களின் நிரல்

ஆகியன தனித்தனி பொதிகளில் இடப்பட்டு தனது இலச்சினை இடப்பட வேண்டும். இங்கு வாக்கெடுப்பு முகவர்களுக்கும் அவசியமாயின் அப்பொதிகளில் தமது இலச்சினைகளை இடலாம்.

அதனைத்தொடர்ந்து, அவை யாவற்றையும் வாக்கெடுப்புநிலைய தலைமைதாங்கும் அலுவலர் ‘வாக்குச்சீட்டுக் கணக்குடன்’ எண்ணும் அலுவலரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

**வாக்கெடுப்பு நிலையத்தில் குழப்பங்களும் வாக்கெடுப்பை வறிதாக்குதலும்** (பிரிவு 46)

வாக்கெடுப்பு நிலையத்தில் இடம்பெறும் யாதேனும் சம்பவங்கள் குழப்பங்கள் காரணமாக,

1 - வாக்கெடுப்பை ஆரம்பிப்பதை குறித்த நேரத்தில் நிறைவேற்ற முடியாமல் செல்லுமாயின்,

2 - குறித்த நேரத்தில் ஆரம்பித்தபோதும் பி.ப. 4.00 மணி வரை முன்னெடுத்துச்செல்ல முடியாமல் செல்லுமாயின்,

3 - வாக்குச்சீட்டுப் பெட்டியொன்று அல்லது பெட்டிகளை வாக்கெண்ணும் அலுவலருக்கு ஒப்படைக்க முடியாமல் செல்லுமாயின்,

வாக்கெடுப்புநிலைய தலைமைதாங்கும் அலுவலா் அவ்விபரங்களை இயன்றளவு விரைவாக தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன், அவா் அதனை தோ்தல்கள் ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

அது குறித்து திருப்தியடையுமிடத்து குறித்த வாக்கெடுப்பு நிலையத்தின் வாக்கெடுப்பை வறிதாக்கும் அதிகாரம் ஆணையாளருக்கு உள்ளது.

அதேபோல்,

1 வாக்கெடுப்புநிலைய தலைமைதாங்கும் அலுவலருக்கு கட்டுப்படுத்தமுடியாத மட்டத்திலான நிகழ்வுகள் காரணமாக வாக்கெடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துச்செல்ல முடியாமல் செல்லல்.

2 வாக்கெடுப்பு முகவா்களைத் தாக்குதல், அச்சுறுத்துதல், துரத்தியடித்தல்.

3 வீதித்தடைகளை ஏற்படுத்துவதன் காரணமாக வாக்கெடுப்புநிலைய பணியாள்தொகுதிக்கு வாக்கெடுப்புநிலையத்திற்கு வர முடியாமல் செல்லல்.

4 வாக்கெடுப்பு நிலையத்திலுள்ள அமைதிச் சூழலைச் சீா்குலைக்கக்கூடிய செயல்கள் இடம்பெறுதல்.

5 வாக்குச்சீட்டுப் பெட்டிகளை பலாத்காரமாக நிரப்புதல்.

6 அமைதியான ஒரு தேர்தலை நடாத்தும் எதிர்பார்ப்பு சீர்குலையக்கூடிய செயல்கள் இடம்பெறுதல்.

ஆகிய விடயங்களும் அத்தகைய வாக்கெடுப்பை வறிதாக்குவதற்குக் காரணமாக அமையும்.

வாக்கெண்ணலை நிறைவுசெய்த பின்னரும் சகல தெரிவத்தாட்சி அலுவலர்களின் அறிக்கைகளும் கிடைத்த பின்னரும் வறிதாக்கப்பட்ட வாக்கெடுப்புநிலையங்களில் வாக்கெண்ணலை மேற்கொள்ளாமல் இருப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் காரணமாக வாக்கெடுப்பின் முடிவுகள் மீது பாதிப்பெதுவும் ஏற்படாதவாறு ஆணையாளரின் அபிப்பிராயமாக அமையக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தில் வேட்பாளர்களுடன் பேசி முடிவுகளை வெளியிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். முடிவுகள் மீது அது பாதிப்பை ஏற்படுத்தலாமென ஆணையாளர் அபிப்பிராயப்படுவாராயின், அவ்வாறான வாக்கெடுப்பு நிலையங்களில் புதிதாக வாக்கெடுப்பை நடாத்த அவர் பணிப்புரை விடுக்க வேண்டும்.

# வாக்கெண்ணல்

**வாக்கெண்ணும் அலுவலர்கள்** (பிரிவு 47)

தெரிவத்தாட்சி அலுவலர் ஒவ்வொரு வாக்கெண்ணும் நிலையத்திலும் வாக்கெண்ணும் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருப்பதற்கு வாக்கெண்ணும் அலுவலர் ஒருவரையும் அவசியமான எழுதுநர்களையும் வேறு அலுவலர் ஒருவரையும் நியமிப்பார்.

தெரிவத்தாட்சி அலுவலரும் வாக்கெண்ணும் அலுவலராகச் செயலாற்றலாம்.

**வாக்கெண்ணல் பற்றிய அறிவித்தல்** (பிரிவு 48)

வாக்குகளை எண்ண ஆரம்பிப்பதற்கு முன்னர் தெரிவத்தாட்சி அலுவலர் பின்வரும் தகவல்களை போட்டியிடும் சகல அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும் அல்லது அதிகாரம்பெற்ற முகவர்களுக்கும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களுக்கும் அறிவிக்க வேண்டும்.

1. வாக்கெண்ணும் நிலையத்தின் அமைவிடம்.
2. வாக்கெண்ணல் ஆரம்பிக்கப்படும் திகதியும் நேரமும்.
3. வாக்கெண்ணும் நிலையத்திற்கு ஒதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்களின் எண்ணிக்கை பற்றிய ஒரு கூற்று.

**வாக்கெண்ணும் முகவர்கள்** (பிரிவு 49)

போட்டியிட்ட அரசியல் கட்சியொன்றின் செயலாளர் அல்லது அதிகாரம்பெற்ற முகவரினாலும் சுயேச்சைக் குழுவொன்றின் தலைவரினாலும்,

1. ஒன்றுக்கு மேற்பட்ட வாக்கெடுப்பு நிலையங்களில் வாக்கெண்ணும் நிலையமொன்றுக்கு ஐந்து வாக்கெண்ணும் முகவர்களையும்
2. ஒரு வாக்கெடுப்பு நிலையத்தில் மட்டும் வாக்கெண்ணும் நிலையமொன்றுக்கு வாக்கெண்ணும் முகவர்கள் இருவரையும்

வாக்கெண்ணும் முகவர்களாக நியமிக்கலாம். அவர்களால் தாம் அவ்வாறு நியமிக்கப்பட்ட முகவர்களின் முழுப்பெயர்கள், முகவரிகள் அத்துடன், தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் தரப்பட்ட எழுத்திலான ஒரு கூற்று வாக்கெண்ணும் அலுவலரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

**வாக்கெண்ணுதல்** (பிரிவு 50)

வாக்கெடுப்பு முடிவடைந்து சகல வாக்கெடுப்பு நிலையங்களின் வாக்குச்சீட்டுப்பெட்டிகளும் கிடைக்கப்பெற்றதும் தாமதமின்றி வாக்கெண்ணலை ஆரம்பிக்க வேண்டும். அதற்கு முன்னர் வாக்கெண்ணும் அலுவலர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் வாக்கெண்ணும் முகவர்களுக்கு,

1. வாக்குச்சீட்டுக்களின் விபரங்கள் காண்பிக்கப்படல் வேண்டும். (அவசியப்படின், அதன் பிரதி எடுப்பதற்கும் அனுமதியுள்ளது)
2. ஒவ்வொரு வாக்குச்சீட்டுப்பெட்டிகளையும் காண்பித்து அதனைத் திறந்துகாட்டி அதிலுள்ள வாக்குச்சீட்டுக்களைக் கணக்கிட்டு அதனைப் பதிவுசெய்துகொள்ள வேண்டும்.

அதனைத்தொடர்ந்து சகல வாக்குச்சீட்டுப் பெட்டிகளின் வாக்குச்சீட்டுக்களும் ஒன்றாகக் கலக்கப்படும். ஒவ்வொரு கட்சிக்கும் அல்லது சுயேச்சைக் குழுவுக்கும் கிடைக்கப்பெற்றுள்ள வாக்குச்சீட்டுக்களை வெவ்வேறாகத் தெரிவுசெய்து அவற்றின் முன்புறம் மேற்பக்கமாக இருக்கக்கூடிய வகையில் பொதிகளாகக்

கட்ட வேண்டும். அச்சீட்டுக்களின் பின்புறத்திலுள்ள இலக்கத்தை எவ்விதத்திலும் ஆளெவருக்கும் காண்பித்தலாகாது.

வாக்குச்சீட்டெதுவும் நிராகரிக்கப்படின் - அதன் பிற்புறத்தில் *'நிராகரிக்கப்பட்டது'* என்று எழுதப்படுதல் வேண்டும்.

கேட்டுப்பெறும் வாக்குச்சீட்டுக்களைக் கணக்கிடாமல் அவை கிடைக்கப்பெற்றுள்ள கட்சி மற்றும் சுயேச்சைக் குழுக்களின்படி வெவ்வேறாக பொதிசெய்தலும் அப்பொதிகளில் அந்தந்த கட்சிகளின் பெயர்கள் அல்லது சுயேச்சைக் குழுக்களின் பெயர்களைக் குறிப்பிடுதலும் வேண்டும்.

**நிராகரிக்கப்படவேண்டிய வாக்குச்சீட்டுக்கள்** (பிரிவு 51)

1. உத்தியோகபூர்வ குறியீட்டைக் கொண்டிராத வாக்குச்சீட்டுக்கள்.
2. போட்டியிட்ட கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் மத்தியில் ஒன்றுக்கு மேற்பட்ட புள்ளடிகள் இடப்பட்ட வாக்குச்சீட்டுக்கள்.
3. வாக்காளரை அடையாளங்காணக்கூடிய ஒரு குறியீடு அல்லது வேறு ஏதேனுமொன்று எழுதப்பட்ட வாக்குச்சீட்டுக்கள்.
4. குறியீடு இடப்படாத வாக்குச்சீட்டுக்கள்.
5. குறியீடுசெய்யப்படுவது நிச்சயமற்றதான வாக்குச்சீட்டுக்கள்.

**வாக்கெண்ணல்** (பிரிவு 51)

வாக்குச்சீட்டின்மீது குறியீடு இடப்படாத, வேறு ஒரு குறியீடு இடப்பட்டபோதும், வாக்காளரின் வாக்களிப்பதற்கான எண்ணம் அதில் தொனிக்குமாயின், அவ்வாக்குச்சீட்டு நிராகரிக்கப்படல் ஆகாது.

உத்தியோகபூர்வ குறியீடொன்று இடப்படாத வாக்குச்சீட்டொன்று களவாக அச்சிடப்பட்டதல்ல எனில் அது நிராகரிக்கப்படல் ஆகாது

என்பதுடன், வாக்கெண்ணும் முகவர்களிடம் அது குறித்த கருத்தறிய வேண்டும்.

வாக்கெண்ணும் அலுவலரினால் நிராகரிக்கப்பட்ட வாக்குச்சீட்டுக்களின் கணக்குகளை வெவ்வேறாகக் காண்பிக்கும் ஒரு கூற்றைத் தயாரித்து வாக்கெண்ணும் முகவர்கள் கோருவார்களாயின், அதன் பிரதி எடுப்பதற்கும் இடமளிக்கப்படல் வேண்டும்.

ஒவ்வோர் அரசியல் கட்சிக்கும் சுயேச்சைக் குழுவுக்கும் சார்பாக கிடைத்துள்ள மொத்த வாக்குகளின் எண்ணிக்கையையும் அந்தந்த வேட்பாளருக்குக் கிடைத்துள்ள விருப்புவாக்குகளின் எண்ணிக்கையையும் எழுத்திலும் இலக்கத்திலும் காட்டும் ஒரு கூற்றைத் தயாரித்து அதனை வாக்கெண்ணும் அலுவலர் அத்தாட்சிப்படுத்தி உதவி எழுதுநர்களில் ஒருவரதும் வாக்கெண்ணும் முகவர்களதும் ஒப்பங்களை சாட்சிகளாக அதற்குப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**விருப்புவாக்குகள்** (பிரிவு 51)

ஒரு வேட்பாளருக்கு ஒரு விருப்புவாக்கை மட்டுமே அளிக்க முடியும்.

மூன்று வேட்பாளர்களுக்குக் கூடுதலானவர்களுக்கு விருப்பு வாக்குகளைக் குறியீடுசெய்துள்ள வாக்குச்சீட்டுக்கள் நிராகரிக்கப்படல் ஆகாது. என்றபோதும் விருப்புவாக்குகள் கணக்கிடப்பட மாட்டாது.

வேட்பாளர் ஒருவருக்கு ஒரு விருப்புவாக்கிற்கு மேல் குறியீடு செய்துள்ளவிடத்து, அவை அனைத்தும் ஒரு விருப்புவாக்காகவே கருதப்படும்.

விருப்புவாக்கு குறியீடுசெய்வது நிச்சயமற்றதாக இருக்கும்போது அவ்விருப்புவாக்கு கணக்கில் எடுக்கப்பட மாட்டாது.

**மீள எண்ணுதல்** (பிரிவு 51)

வாக்கெண்ணும் அலுவலர் அவசியமானதெனக் கருதுவாராயின், பல தடவைகளாயினும் வாக்குகளை மீள எண்ணாம். வாக்கெண்ணும் முகவர்களின் கோரிக்கையின் பேரிலும் ஆகக்கூடியது இரண்டு தடவைகள் மீள எண்ணலாம். வாக்குச்சீட்டுக்கள் பற்றி வாக்கெண்ணும் அலுவலரின் முடிவு இறுதியானதாகும்.

**வாக்கெண்ணலை முடிவுறுத்தல்** (பிரிவு 53)

(1) எண்ணப்பட்ட வாக்குச்சீட்டுக்கள்
(2) நிராகரிக்கப்பட்ட வாக்குச்சீட்டுக்கள்
(3) கேட்டுப்பெறும் வாக்குச்சீட்டுக்கள்
(4) வாக்குச்சீட்டுக் கணக்கு
(5) பாவித்த மற்றும் பழுதுபட்ட வாக்குச்சீட்டுக்கள்
(6) தேருநர் இடாப்பில் குறியீடுசெய்யப்பட்ட பிரதிகள்
(7) வாக்குச்சீட்டுக்களின் அடியிதழ்கள்
(8) வாக்குச்சீட்டுக்களை ஒப்படைக்காதவர்களின் நிரல்
(9) கேட்டுப்பெறும் வாக்குகளின் நிரல்
(10) வாக்கெண்ணுதல் பற்றிய அறிக்கை
(11) நிராகரிக்கப்பட்ட வாக்குச்சீட்டுக்கள் பற்றிய அறிக்கை
(12) ஒவ்வோர் அரசியல் கட்சிக்கும் சுயேச்சைக் குழுவுக்கும் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையையும் ஒவ்வொரு வேட்பாளரும் பெற்றுக்கொண்ட விருப்பு வாக்குகளின் எண்ணிக்கையும் காட்டும் அறிக்கை

ஆகியவற்றை வாக்கெண்ணும் அலுவலர் பொதிகளில் வெவ்வேறாக இட்டு அவற்றுக்கு இலச்சினையிட்டு தெரிவத்தாட்சி அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும்.

**அஞ்சல் வாக்குச்சீட்டுக்களை எண்ணுதல்** (பிரிவு 54)

நிருவாக மாவட்டம் ஒவ்வொன்றினதும் அஞ்சல் வாக்குச்சீட்டுக்களை தனிவேறாக இருக்கின்ற நிலையமொன்றில் அல்லது பல நிலையங்களில் எண்ணுதல் வேண்டும்.

அஞ்சல் வாக்குச்சீட்டுக்களை எண்ணுமிடத்து முதலில் குறிப்பிட்டுள்ள சாதாரண வாக்கெண்ணல் நடவடிக்கைமுறை பின்பற்றி ஒழுகப்படும். ஒரு நிலையத்திற்கு வாக்கெண்ணும் முகவர்கள் ஒவ்வொரு கட்சியிலிருந்து/ குழுக்களிலிருந்து இரண்டு பேருக்கு மேற்படாத எண்ணிக்கையினரை நியமிக்கலாம்.

ஒவ்வொரு அஞ்சல் வாக்குச்சீட்டுப் பெட்டியையும் திறந்து அவற்றிலுள்ள கடிதவுறைகளைக் கணக்கிட்டு ஒவ்வொரு கடித உறையையும் தனித்தனியாகத் திறக்க வேண்டும். செல்லுபடியான அஞ்சல் வாக்குச்சீட்டுக்கள், ஆளடையாள வெளிப்படுத்துகைப் பத்திரங்கள், நிராகரிக்கப்பட்ட வாக்குச்சீட்டுக்களை இடுவதற்கான

1. அஞ்சல் வாக்காளர்களின் வாக்குச்சீட்டுத் தொட்டி.
2. ஆளடையாள வெளிப்படுத்துகைக்கான தொட்டி
3. அஞ்சல் வாக்காளர்களின் நிராகரிக்கப்பட்ட வாக்குகளுக்கான தொட்டி

என்றவாறு மூன்று தொட்டிகள் தயார்செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

## அஞ்சல் வாக்கு உறைகளைத் திறத்தல்

1. ஆளடையாள வெளிப்படுத்துகையொன்றையும் வாக்குச்சீட்டு கடிதவுறையொன்று அல்லது ஆளடையாள வெளிப்படுத்துகை யொன்றையும் கடிதவுறையொன்றில் இடப்பட்டிராத வாக்குச்சீட்டொன்று காணப்படின், அவற்றை உரிய முறையில் அனுப்பிவைத்திருப்பின் ஆளடையாள வெளிப்படுத்துகைக் கூற்றையும் வாக்குச்சீட்டு அல்லது வாக்குச்சீட்டுடன்கூடிய உறையை அவற்றுக்குரிய தொட்டிகளில் இட வேண்டும்.

2. ஆளடையாள வெளிப்படுத்துகை பற்றி திருப்தியடைய முடியாதிருப்பின்- *‘ஆளடையாள வெளிப்படுத்துகை நிராகரிக்கப்பட்டது’* என்று அதில் குறிப்பிட்டு, அதனை அங்கிருக்கும் வாக்கெண்ணும் முகவர்களுக்குக் காண்பித்து முகவர் எவரேனும் ஆட்சேபணை தெரிவிப்பாராயின் - *‘நிராகரிப்பதற்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது’* என்பதையும் அதில் குறிப்பிட்டு, அதனுடன் அனுப்பிவைத்துள்ள வாக்குச்சீட்டு அல்லது வாக்குச்சீட்டு உறையை அதனுடன் இணைத்து நிராகரிக்கப்பட்ட வாக்குச்சீட்டுக்களுக்கான பாத்திரத்தில் இடுதல் வேண்டும்.

3. ஆளடையாள வெளிப்படுத்துகை மட்டும் கடிதவுறையில் இருக்குமாயின்-*‘அடையாள வெளிப்படுத்துகை நிராகரிக்கப்பட்டது. வாக்குச்சீட்டொன்று அல்லது வாக்குச்சீட்டு உறை கிடைக்கவில்லை’* என்று அதன் மீது குறிப்பிட்டு நிராகரிக்கப்பட்ட வாக்குச்சீட்டுத் தொட்டியில் இதனை இட வேண்டும்.

4. கடிதவுறையொன்று இல்லாமல் வாக்குச்சீட்டொன்று மட்டும் இருக்குமாயின்- *‘நிராகரிக்கப்பட்டது. ஆளடையாள வெளிப்படுத்துகை கிடைக்கவில்லை’* என்று குறிப்பிட்டு நிராகரிக்கப்பட்ட வாக்குச்சீட்டுக்களின் தொட்டியில் இட வேண்டும்.

5. வாக்குச்சீட்டு கடிதவுறை மாத்திரம் அனுப்பிவைக்கப்பட்டிருப்பின், அதனைத் திறந்து வாக்குச்சீட்டொன்றும் ஆளடையாள வெளிப்படுத்துகையொன்றும் அதனுள் இருப்பின் அவற்றை ஒப்புநோக்கிப்பார்த்து சரியானதெனில், ஆளடையாள வெளிப்படுத்துகையையும் வாக்குச்சீட்டையும் உரிய தொட்டிகளில் இட வேண்டும். அவ்வாறல்லாதபட்சத்தில்- *‘ஆளடையாள வெளிப்படுத்துகை நிராகரிக்கப்பட்டது’* என்று குறிப்பிட்டு முகவர்களுக்கும் காண்பித்துவிட்டு ஆட்சேபணை தெரிவிக்கப்படின், அது பற்றியும் குறிப்பிட்டு

வாக்குச்சீட்டொன்றையும் இணைத்து நிராகரிக்கப்பட்டவற்றின் தொட்டியில் இட வேண்டும்.

6. கடிதவுறையைத் திறக்கும்போது ஆளடையாள வெளிப்படுத்துகைக்கான கூற்றேனும் மட்டும் காணப்படுமாயின், வேறு எதுவும் அதனுள் இருக்கவில்லையெனில், குறித்த குறிப்புகளை இட்டு நிராகரிக்கப்பட்டவற்றின் தொட்டியில் இட வேண்டும்.

7. உறையினுள் எதுவும் இருக்கவில்லையெனில்,- *'நிராகரிக்கப்பட்டது. கடிதவுறையில் எதுவும் இல்லை'* என்று குறிப்பிட்டு நிராகரிக்கப்பட்டவற்றின் தொட்டியில் இட வேண்டும்.

8. அதன்பின்பு வாக்குச்சீட்டுக்களின் தொட்டியிலுள்ள ஒவ்வொரு உறையாகத் திறந்து உறையின் இலக்கமும் வாக்குச்சீட்டின் இலக்கமும் பொருந்திவருகின்றதாயின், வாக்குச்சீட்டுக்களின் குவியலில் இட வேண்டும்.

9. உறையின் இலக்கமும் வாக்குச்சீட்டின் இலக்கமும் பொருந்திவரவில்லை எனில், அல்லது உள்ளே வாக்குச்சீட்டு இருக்கவில்லை எனில், குறித்த குறிப்புக்களை இட்டு நிராகரிக்கப்பட்டவற்றின் குவியலில் இட வேண்டும்.

**அஞ்சல் வாக்குகளை எண்ணுதல்**

செல்லுபடியான அஞ்சல் வாக்குச்சீட்டுக்களை எண்ணி ஒவ்வொரு கட்சியும் குழுவும் பெற்றுக்கொண்ட வாக்குகள் எண்ணிக்கையையும் அந்தந்த குழுக்களின் வேட்பாளர்கள் பெற்றுக்கொண்ட விருப்புவாக்குகளின் எண்ணிக்கையும் தருகின்ற அறிக்கையொன்றைத் தயாரித்து அவ்வறிக்கையையும்,

1. எண்ணப்பட்ட வாக்குச்சீட்டுக்கள்
2. நிராகரிக்கப்பட்ட வாக்குச்சீட்டுக்கள்
3. நிராகரிக்கப்பட்ட வாக்குச்சீட்டுக்களின் கூற்று
4. ஆளடையாள வெளிப்படுத்துகைகள் மற்றும் நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் தொட்டிகளிலுள்ள வெவ்வேறாக தயார்செய்யப்பட்ட இரண்டு பொதிகள்
5. வாக்கெண்ணல் பற்றிய அறிக்கைகள்

என்பவற்றையும் வெவ்வேறாக இலச்சினையிட்டு தெரிவத்தாட்சி அலுவலருக்கு அனுப்பிவைக்க வேண்டும். தெரிவத்தாட்சி அலுவலர் அப்பொதிகளைத் திறக்க முன்னர் அதிலுள்ள இலச்சினையைப் பரிசோதிப்பதற்காக முடிவுகளை வெளியிடும் இடத்திலுள்ள முகவர்களைக் கோரலாம். (ஒழுங்குவிதிகள் 18-28)

**முடிவுகளை வெளியிடுதல்** (பிரிவு 58)

முடிவுகள் வெளியிடப்படும் நேரமும் இடமும் குறித்த ஆவணமொன்றினாலான அறிவித்தலொன்று போட்டியிட்ட அரசியல் கட்சிகளினதும் கட்சிகளினதும் செயலாளர்களுக்கு அல்லது அதிகாரம்பெற்ற முகவர்களுக்கும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களுக்கும் தெரிவத்தாட்சி அலுவலர் முடிவுகளை வெளியிட முன்னர் அறிவிக்க வேண்டும்.

நிருவாக மாவட்டத்தில் வாக்கெடுப்புக்கு வேட்பாளர்கள் தோன்றச்செய்யப்பட்ட சகல கட்சிகளினாலும் சுயேச்சைக் குழுக்களினாலும் முடிவுகள் வெளியிடப்படும் இடத்தில் சமுகமாயிருப்பதற்கு இரண்டு முகவர்கள் வீதம் நியமிக்கப்படலாம். நியமன ஆவணத்தில் ஒவ்வொரு முகவரின் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கமும் உள்ளடக்கப்பட்டு கட்சியின் செயலாளர் அல்லது அதிகாரம்பெற்ற முகவரினாலும் சுயேச்சைக்

குழுவொன்றின் தலைவரினாலும் முடிவுகளை வெளியிட முன்னர் தெரிவத்தாட்சி அலுவலரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

மாவட்டத்தின் சகல வாக்கெண்ணும் நிலையங்களிலிருந்தும் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அனுப்பிவைக்கப்பட்ட அறிக்கையின்படி ஒவ்வொரு குழுவும் பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையையும் ஒவ்வொரு வேட்பாளரும் பெற்றுக்கொண்ட விருப்புவாக்குகளின் எண்ணிக்கையையும் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கையையும் செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கையையும் வெவ்வேறாகக் கூட்டி தேர்தல் முடிவை வெளிப்படுத்த வேண்டும்.

போட்டியிட்ட ஒவ்வொரு குழுவுக்கும் விகிதசமமாக உரித்தாகவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கும்போது பின்வரும் முறை பின்பற்றப்படல் வேண்டும்:-

**கிடைக்கவேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை** (பிரிவு 58)

மாவட்டம் முழுவதிலிருந்தும் கிடைத்த சகல செல்லுபடியான வாக்குகள் எண்ணிக்கையை (குறித்த வாக்குகள் எண்ணிக்கை) அம்மாவட்டத்திலிருந்து தெரிவுசெய்யப்படவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையால் வகுக்க வேண்டும். அப்போது பொதுவாக உறுப்பினர் ஒருவராவதற்கு வேட்பாளர் ஒருவர் பெறவேண்டிய எண்ணிக்கையை (விளைதொகை) தீர்மானிக்கலாம். அவ்விளைதொகையிலிருந்து ஒவ்வொரு கட்சி/குழுக்களும் பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையை வகுக்கும்போது அந்தந்த குழுக்களிலிருந்து தெரிவுசெய்யப்படவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்படும். இச்சந்தர்ப்பத்தில் அவ்வாறு வகுப்பதன்மூலம் எஞ்சும் பெறுமானம் கருத்திற்கொள்ளப்பட மாட்டா.

அதன்பின்னரும் மேலும் உறுப்பினர்களைத் தெரிவுசெய்து-கொள்வதற்கிருப்பின் முந்திய பிரிப்பின்போது எஞ்சிய வாக்குகளின் எண்ணிக்கையையும் ஒரு வேட்பாளரேனும் நியமித்துக்கொள்ள இடம்

கிடைக்காத கட்சி அல்லது குழுக்களைக் கருத்திற்கொண்டு கூடுதல் வாக்குகள் எண்ணிக்கையைப் பெற்றுக்கொண்ட கிரம ஒழுங்கின்படி நிலுவை உறுப்பினர் எண்ணிக்கையைத் தெரிவுசெய்துகொள்ளலாம். எஞ்சிய உறுப்பினர் எண்ணிக்கை தெரிவுசெய்யப்படும். அதன்பின் அந்தந்த குழுவிலிருந்து நியமிக்கப்படவேண்டிய வேட்பாளர்கள் தீர்மானிக்கப்படல் வேண்டும். யாதேனும் குழுக்களில் எஞ்சிய எண்ணிக்கைகள் சமமானதாக அமையுமாயின், திருவுளச்சீட்டு முறையின்மூலம் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

யாதேனுமொரு காரணத்தால் வாக்காளர்கள் விருப்புவாக்குகளை குறியீடுசெய்திருக்கவில்லை எனில், நிரலிலிருந்து எந்த வேட்பாளர்களை, குழுவின் தலைவரை என்பதை கட்சியின் செயலாளரிடம் விசாரித்து தெரிவுசெய்துகொள்ள வேண்டும். தெரிவத்தாட்சி அலுவலரின் விசாரணைக்கு குழுவின் தலைவர் அல்லது கட்சியின் செயலாளர் முடிவொன்றை வழங்காதவிடத்து நிரலிலுள்ள பெயர்களில் தொடக்கத்திலிருந்து முறைப்படி உரிய எண்ணிக்கையைத் தெரிவுசெய்துகொள்ளும் அதிகாரம் தெரிவத்தாட்சி அலுவலருக்கு உள்ளது.

முடிவுகளை வெளிப்படுத்திய பின் முடிவுகளின் அறிக்கையை முறையாகத் தயாரித்து தெரிவத்தாட்சி அலுவலர் தேர்தல்கள் ஆணையாளருக்கு அனுப்பிவைக்கும்போது அது வர்த்தமானியில் பிரசுரிக்கப்படல் வேண்டும்.

**மிகுதி (போனஸ்) ஆசனங்கள்** (பிரிவு 61)

சகல தெரிவத்தாட்சி அலுவலர்களிடமிருந்தும் ஆணையாளருக்கு அறிக்கைகள் கிடைத்ததும் அவரால் குறித்த மாகாணத்தில் அதிகூடிய வாக்குகளைப் பெற்றுக்கொண்ட கட்சி/குழுவுக்கு மிகுதி ஆசனங்கள் இரண்டு ஒதுக்கப்படும். இங்கு அரசியல் கட்சியொன்றிலாயின், அதன் செயலாளராலும் சுயேச்சைக் குழுவொன்றாயின், அதன் குழுத்

தலைவராலும் அவ்வாசனங்களுக்கு தமது நியமனப்பத்திர நிரலில் எந்த வேட்பாளர்களை நியமிப்பது என்பது தீர்மானிக்கப்படும்.

தெரிவத்தாட்சி அலுவலருக்கு ஒப்படைக்கப்பட்ட வாக்கெடுப்புசார்ந்த பொதிகள், அவை அனுப்பிவைக்கப்பட்டு ஆறு மாத காலம் கடந்த பின் அழிக்கப்பட வேண்டும்.

தேர்தல் மனுவொன்று தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவுப்படியன்றி வாக்கெடுப்பு தொடர்பான எந்தவொரு பொதியையும் திறந்துபார்க்க ஆளெவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

**உறுப்பினர் வெற்றிடங்கள்** (பிரிவு 62)

1. மாகாண சபையொன்றின் வேட்பாளர் ஒருவராவதற்கான தகுதியீனம் மாகாண சபைக்குத் தெரிவுசெய்யப்பட்ட பின் ஏற்படுதல்.
2. மாகாண சபையொன்றின் வேட்பாளரொருவதற்கான தகுதியீனமொன்று மாகாண சபைக்குத் தெரிவுசெய்யப்பட்ட பின் ஏற்படுதல்.
3. கேட்டுவிலகுதல்.
4. தான் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் அங்கத்துவம், கேட்டுவிலகியதன்மூலமோ வெளியேற்றப்படுவதன்மூலமோ வேறு காரணத்தினாலோ வறிதாகுமிடத்து அவ்வாறு வறிதாகி ஆறு மாத காலம் கடந்துள்ளபோது,
4. இறப்பெய்துதல் ஆகிய காரணங்களின்பேரில் மாகாண சபையொன்றின் உறுப்பினரொருவரின் ஆவணம் வெற்றிடமாகும்.

எனினும், யாதேனும் ஒரு கட்சியிலிருந்து அல்லது குழுவிலிருந்து வெளியேற்றப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு மாத காலத்துள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல்செய்து, அதற்கு

ஆட்சேபணை தெரிவிக்கப்படுமாயின், அதன் முடிவு கிடைக்கப்பெறும் வரை உறுப்பாண்மையை வகிக்கலாம். வெளியேற்றப்படுவது செல்லுபடியானதெனத் தீர்மானிக்கப்படுமாயின், தீர்மானத் திகதியிலிருந்து உறுப்பினர் பதவி வெற்றிடமாகும்.

மாகாண சபையின் உறுப்பினர் பதவிவொன்று வெற்றிடமாகுமிடத்து அது பற்றி மாகாண சபையின் செயலாளரினால் தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிக்கப்படல் வேண்டும். அதன்படி, தேர்தல்கள் ஆணையாளர் பதவிவெற்றிடம் ஏற்பட்டுள்ள உறுப்பினர் சார்ந்த அரசியல் கட்சியின் செயலாளரிடம் அல்லது சுயேச்சைக் குழுவின் தலைவரிடம் அப்பதவி வெற்றிடத்திற்குப் பொருத்தமானவரொருவரின் பெயரை முன்மொழியுமாறு கோர வேண்டும். அக்கோரிக்கைப்படி ஆளொருவர் பெயர்குறிக்கப்பெறின், அவரை உறுப்பினர் பதவியைப் பெயர்குறிக்க வேண்டும். உரிய காலத்தில் பெயரொன்று முன்மொழியப்படாதவிடத்து, பதவி வெற்றிடத்தை ஏற்படுத்திய உறுப்பினர் சார்ந்த குழுவின் நிரலில் தெரிவுசெய்யப்படாதவர்களிலிருந்து அதிகூடிய விருப்புவாக்குகளைப் பெற்றுக்கொண்டவர் அப்பதவிக்கு நியமிக்கப்படுவார்.

**இடைத்தேர்தலொன்றை நடாத்துதல்** (பிரிவு 65)

பின்வரும் சந்தர்ப்பங்களில் ஆணையாளரினால் செய்யப்பட்ட அறிவித்தலொன்றின்படி சனாதிபதியினால் பதவிவெற்றிடமொன்றை நிரப்புவதற்கு வாக்கெடுப்பொன்று நடாத்தப்படலாம்:

1. நியமனப்பத்திரத்தில் பதவிவெற்றிடமொன்றை நிரப்புவதற்காக பெயரொன்று எஞ்சியிருக்காத ஒரு சந்தர்ப்பத்தில்.
2. பெயர்கள் எஞ்சியிருந்தபோதும், அவர்களுக்கு ஒரேயொரு விருப்புவாக்கேனும் இருக்காதவிடத்து.
3. வெற்றிடம் ஏற்பட்டுள்ள உறுப்பினர், அந்த நிருவாக மாவட்டத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர் அல்லாத ஒரு சந்தர்ப்பத்தில்.

# தேர்தல் மனுக்கள்

யாதேனுமொரு மாவட்டத்தில் வாக்கெடுப்பொன்று உரிய முறையில் நடைபெறவில்லை என்றும், வேட்பாளர்களினாலோ அல்லது அவர்களின் முகவர்களினாலோ வாக்கெடுப்பு தொடர்பான ஊழல் பழக்கங்கள் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்ற ஒரு சந்தர்ப்பத்தில் வாக்கெடுப்பை இரத்துச்செய்யுமாறு தேர்தல் மனுவொன்றின்மூலம் கோர முடியும். அது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்படல் வேண்டும். குறித்த வாக்கெடுப்பில் வேட்பாளரொருவராக இருந்த ஆளொருவர் அல்லது தெரிவுசெய்யப்படும் உரித்து இருந்ததாகத் தெரிவிக்கப்படும் ஆளொருவருக்கு மாத்திரமே அவ்வாறான ஒரு மனுவைத் தாக்கல்செய்ய முடியும்.

வாக்கெடுப்பு முடிவுகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு 21 நாட்களுக்குள் மனுவொன்றின்மூலமும் சத்தியக்கடதாசியொன்றின் மூலமும் இம்மேன்முறையீட்டைச் செய்ய வேண்டும்.

உறுப்பினர் ஒருவரினால் அல்லது அவரது முகவர் ஒருவரினால் செய்யப்பட்டதாகக் கூறப்படும் ஊழல் பழக்கமொன்று அல்லது அதற்கு உடந்தையான பெறுபேறுகளை வர்த்தமானியில் பிரசுரித்த பின் யாதேனும் ஒரு கொடுப்பனவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படும் தேர்தல் மனுவொன்று அப்பணரீதியான கொடுப்பனவைச் செய்த திகதியிலிருந்து 26 நாட்களுக்குள் கிடைக்கலாம்.

**மனுவொன்றைத் தாக்கல்செய்வதற்கு அவசியமான காரணிகள்** (பிரிவு 92)

மாவட்டத்தின் வாக்கெடுப்பை முற்றாக வறிதானதென வெளிப்படுத்துமாறு கோரக்கூடிய சந்தர்ப்பங்கள்:

1. இலஞ்சம் வழங்குதல், உபசாரம்செய்தல், பொதுவான அச்சுறுத்தல் அல்லது வேறு பிறழ்நடத்தைகள் காரணமாக

தேருநர்களில் யாதேனுமொரு பிரிவினருக்கு அவர்களின் விருப்பின்படி வாக்களிப்பதிலிருந்து தவிர்ந்திருக்க நேரிட்டதன் காரணமாக தேர்தல் முடிவுகள் மீது பாதிப்பொன்று ஏற்பட்டிருத்தல்.

2. தேர்தல் தொடர்பான சட்டத்தின்படி அது நடாத்தப்படாமை காரணமாக முடிவுகள் மீது பாதிப்பொன்று ஏற்பட்டிருத்தல்.

**யாதேனுமொரு உறுப்பினரின் தெரிவை வறிதாக்குமாறு கோரக்கூடிய சந்தர்ப்பங்கள்**

1 வேட்பாளரினால் அல்லது அவர் அறிந்தநிலையில் அவரது முகவரொருவரினால் அல்லது தேர்தல் தொடர்பான சட்டவிரோதமான அல்லது ஊழல் பழக்கமொன்று புரியப்பட்டுள்ளவிடத்து.

2 வேட்பாளரின் பிரசார நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்திக்கொள்ளப்பட்ட ஆளொருவர் அதற்கு முன்னர் ஏழு ஆண்டுகளில் தேர்தல் சார்ந்த ஊழல் பழக்கமொன்றுக்கு நீதிமன்றமொன்றின்மூலம் தவறாளி என குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருத்தல்.

3 சமூக இயலாமையொன்றுக்கு உள்ளான ஒருவர் அக்காலம் கடந்துசெல்ல முன்னர் தேர்தல் ஆதரவாளர் ஒருவராக ஈடுபடுத்தப்பட்டிருத்தல்.

4 தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் குறித்த ஆள் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு தகுதியற்ற ஒருவராக இருத்தல்.

**மனுவொன்றின்மூலம் கோரப்படக்கூடிய நிவாரணங்கள்** (பிரிவு 96)

1 முழு மாவட்டத்தின் வாக்கெடுப்பும் வறிதானது என்ற ஒரு வெளிப்படுத்துகை அல்லது
2 தெரிவுசெய்யப்பட்டுள்ள ஆளொருவர் உரிய முறையில் நியமனம்பெறவில்லை என்ற ஒரு வெளிப்படுத்துகை
3 வேட்பாளர் ஒருவர் உரிய முறையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்ற ஒரு வெளிப்படுத்துகை

**மனுவின் தரப்பினர்களாக்கப்பட வேண்டியவர்கள்** (பிரிவு 97)

1. தெரிவுசெய்யப்பட்டுள்ள வேட்பாளர்கள் அனைவரும் அல்லது அவர்களில் எவரையேனும் நியமித்துக்கொண்டிருப்பது இரத்தாகியுள்ளதென்றும் அதன்காரணமாக அவர்கள் சார்பாக தான் அல்லது வேறு வேட்பாளர் ஒருவர் நியமனம்பெற்றுள்ளதென்பதற்கான முடிவொன்று கோரப்படுமாயின், மனுதாரர் தவிர்ந்த போட்டியிட்ட அனைவரும் எதிர்வாதிகளாக்கப்படல் வேண்டும்.
2. அவ்வாறு வேறு வேட்பாளர்கள் தெரிவுசெய்யப்பட்டதென்பதற்கான முடிவொன்றைக் கோரவில்லையெனில், தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர்கள் மட்டும் தரப்பினர்களாக்கப்படல் வேண்டும்.
3. ஊழல் அல்லது சட்டமுரணான ஒரு செயல் தொடர்பில் தம்மால் சார்த்தப்படும் வேட்பாளர் அல்லது ஆள்.
4. அதேபோல், மனுவில் எதிர்வாதி ஒருவராக்கப்பட்டுள்ள வேட்பாளர் ஒருவருக்கு நீதிபதியின் அனுமதிபெற்று மனுவில் எதிர்வாதி ஒருவராகலாம். இங்கு, பிணையொன்றை வைக்குமாறு விதித்துரைக்கப்படின், அவ்வாறு செய்தல் வேண்டும்.

**மனுவின் பொருளடக்கம்** (பிரிவு 98)

1. தான் தேர்தலொன்றில் வேட்பாளரொருவராக இருந்தமையால் மனுத்தாக்கல்செய்யும் உரிமை தனக்கு உள்ளது.
2. தேர்தல் நடாத்தப்பட்டமையும் அதன் முடிவும்.
3. மனுதாரர் ஆதாரமாக நம்பியிருக்கும் முக்கிய நிகழ்வுகளின் ஒரு சுருக்கக் கூற்று.
4. ஊழல் அல்லது சட்டமுரணான பழக்கத்தின் தரப்பினர்களின் பெயர்களும் அத்தகைய பழக்கம் அவர்களால் செய்யப்பட்ட திகதியும் இடங்களும் குறித்த விபரமும் அவற்றை உறுதிப்படுத்துவதற்கான ஒரு சத்தியக் கடதாசியும்.
5. நிருவாக மாவட்டம் முழுவதும் தேர்தல் வறிதாக்கப்பட வேண்டுமா அன்றேல் உறுப்பினர் ஒருவரது நியமனம் வறிதாக்கப்படல் வேண்டுமா என்ற இறைஞ்சுதல் (சாட்சிகள் குறிப்பிடப்பட வேண்டியதில்லை)
6. மனுதாரர்கள் அனைவரும் ஒப்பமிட்டிருத்தல்.

தேர்தல் மனுவொன்று தாக்கல்செய்யப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாத காலத்துள் விசாரணை நடாத்தி முடிவுசெய்யப்படுதல் வேண்டும்.

தேர்தல் மனுவொன்றுக்கு அளிக்கப்பட்ட தீர்ப்பொன்றை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்திலும் மீண்டும் மேன்முறையீடொன்றைச்செய்யும் வாய்ப்புள்ளது. மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பின் ஒரு மாதம் கடப்பதற்கு முன் மனுதாரர் அல்லது எதிர்வாதி அதனைச் செய்யலாம்.

உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு ஏற்றுக்கொள்ளப்படுமாயின், மேன்முறையீட்டு நீதிமன்றத்திலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட சான்றிதழும் அறிக்கையும் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு மாற்றப்படுமாயின், உயர்நீதிமன்றத்தினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை சனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு நீதிமன்ற அறிக்கை அல்லது உயர்நீதிமன்றத்தின் அறிக்கை சனாதிபதிக்கு கிடைக்குமிடத்து, அவ்வறிக்கைப்படி அம்மாவட்டத்தில் தேர்தல் வறிதானதென வெளிப்படுத்தவேண்டியிருப்பின், அச்சான்றிதழ் கிடைக்கப்பெற்ற ஒருமாத காலத்துள் சனாதிபதியானவர் வர்த்தமானியில் பிரசுரிக்கும் அறிவித்தலொன்றின்மூலம் மீண்டும் தேர்தலொன்றை நடாத்துமாறு விதித்துரைக்க வேண்டும்.

நீதிமன்ற அறிக்கை தமக்குக் கிடைக்குமிடத்து சனாதிபதியினால் அது வர்த்தமானியில் பிரசுரிக்கப்படல் வேண்டும். வேட்பாளர் எவரேனும் ஊழல் மற்றும் சட்டமுரணான ஒரு செயலுடன் சம்பந்தப்பட்டிருப்பதாக அறிக்கையினால் தீர்ப்பிடப்பட்டிருப்பின், அவரது பெயரை தெரிவத்தாட்சி அலுவலர் நியமனப்பத்திரத்திலிருந்து நீக்கிவிட வேண்டும். பதிவு அலுவலரினால் வாக்கெடுப்பு ஆவணத்திலிருந்து அவரது பெயர் நீக்கப்படும்.

## **IN RE THE THIRTEENTH AMENDMENT TO THE CONSTITUTION AND THE PROVINCIAL COUNCILS BILL**

SUPREME COURT.
S. SHARVANANDA, C.J., R. S. WANASUNDERA, J.,
P. COLIN-THOME, J., K. A. P. RANASINGHE, J.,
E. A. D. ATUKORALE, J, H. D. TAMBIAH, J.,
L. H. DE ALWIS, J., O. S. M. SENEVIRATNE, J.,
AND H. A. G. DE SILVA, J.,

*Thirteenth Amendment to the Constitution-Provincial Councils Bill-Presidential Reference-Articles 18, 76, 83, 120, 121, and 138 of the Constitution-Referendum-Chapter XVIIA, Articles 154A to T.*

The President referred two Bills entitled "Thirteenth Amendment to the Constitution A Bill to amend the Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka" and Provincial Councils Bill" to the Supreme Court under Article 121 of the Constitution.

The Thirteenth Amendment sought to amend the provisions in the Constitution relating to language (Article 18), jurisdiction of the Court of Appeal by addition of jurisdiction to review orders of the High Court made in its new appellate jurisdiction (Article 138 (1) and by the addition of a new Chapter XVIIA and Articles 154A to 154T relating to the executive, administrative and legislative powers of Provincial .Councils and the power of amendment, overriding or repealing them vested in Parliament.

**Determination**: (Per Sharvananda, C.J., Colin-Thome". J., Atukorale, J. and Tambiah, J.)

Neither the Provincial Councils Bill nor any provisions of the Thirteenth Amendment to the Constitution requires approval by the People at a Referendum by virtue of the provisions of Article 83. Once the Bill is passed by a 2/3 majority and the Constitution amended accordingly the Provincial Councils Bill will not be inconsistent with the so amended Constitution.

The Unitary character of the State of which the characteristics are the supremacy of the central Parliament and the absence of subsidiary sovereign bodies remains unaffected. The Provincial Councils do not exercise sovereign legislative power and are only subsidiary bodies exercising limited legislative power subordinate to that of Parliament. Parliament has not there by abdicated or in any manner alienated its legislative power. Delegated legislation is legal and permitted and does not involve any abandonment or abdication of legislative power in favour of any newly created legislative authority.

The concept of devolution is used to mean the delegation of Central Government power without the relinquishment of supremacy. Devolution may be legislative or administrative or both and should be distinguished from decentralization. The scheme of devolution set out in the Bills does not erode the sovereignty of the People and does not require the approval of the People at a Referendum.

Ranasinghe, J. agreed with the above determination but held that the provisions of clauses 154 (2) (b and (3) (b) of the Bill to amend the Constitution (Thirteenth Amendment) require approval by the People at a Referendum.

**Wanasundera, J., L. H. de Alwis, J., Seneviratne, J. and H. A. G. de Silva, J.,** dissented and determined that both Bills in their totality required the approval of the people at a Referendum.